# "இலங்கைத் தமிழர் போராட்டத்துக்கு சர்வதேச ஆதரவை திரட்டுவேன்!'

## வண. மைக்கல் ஸ்கொட் வாக்குறுதி!

இலங்கைத் தமிழர் நடத்திவரும் நியாயமான போராட்டத்துக்கு சர்வ தேசரீதியில் தாம் ஆதரவு திரட்டித்தருவதாக அனைத்துலக நிறுவனமான சிறுபான்மை உரிமைக் குழுவைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய மைக்கல் ஸ்கொட், லண்டனில் உறுதியளித்துள்ளார் லண்டனில் அண்மையில் நடைபெற்ற ஈழத் தமிழர் கழகத்தினரின் கூட்டமொன்றில் பேசுகையிலேயே மேற்கண்ட உறுதிமொழியை அவர் அளித்திருக்கிறு

—5-ம் பக்கம் பார்க்க


# சுதந்திரன்

SUTANTIRAN

விலை சதம் 60. தொலை பேசி : 23411 நிறுவியது: 1947.

வள்ளுவர் ஆண்டு 2007 | ஆனி 28 | றஜபு 12 | (11-7-76) ஞாயிறு | புத்தகம் 30, | இதழ் 23


● சிறையிருக்கும் தமிழ் இளைஞர் பிரச்சினை மீதே

# தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது போராட்டம்!

## திருகோணமலையில் விபரம் அறிவிக்கப்படும்!

திருகோணமலை மாநாட்டையடுத்து தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கவிருக்கும் தேசிய விடுதலை இயக்கத்தின் முதலாவது கட்டம் சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர் சம்பந்தப்பட்டதாகவேயிருக்கும் என்று தெரியவருகிறது. சிறைச்சாலைகளில் ஆண்டுக்கணக்காக விசாரணையின்றித் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களை நீதிமன்றத்துக்கு கொண்டு வரும்படியும் இன்றேல் உடனடியாக அவர்களை விடுதலை செய்யும்படி கோரி மாபெரும் மக்கள் இயக்கமொன்றை மாநாட்டையடுத்துக் கூட்டணி ஆரம்பிக்கும் என்று அறியப்படுகிறது.

சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர் பிரச்சினைமீது தமிழர் விடுதலைக் கூட்டணி ஆரம்பிக்கவிருக்கும் நேரடி இயக்கம் பற்றிய விபரங்கள் திருகோணமலை மாநாட்டில் அறிவிக்கப்படவிருக்கிறது. சிறைச்சாலைகளில் ஆண்டுக் கணக்காக வைக்கப்பட்டி

– 8-ம் பக்கம் பார்க்க

## நீதி விசாரணையின்றி 4 ஆண்டுகள் சிறை!

நற்தமிழ் ஈழத்தின் விடுதலை வேண்டி நீதி விசாரணை பற்ற சிறை வாழ்வை 12-7-76 திங்கட்கிழமையுடன் பூர்த்திசெய்கிறுர் திரு. த. அமரசிங்கம் கண்டி போகம்பரைச் சிறையில் இருக்கும் அந்த வீரரைப் பற்றிய செய்தியை உள்ளே காணலாம்.

# உதயசூரியன் ஒளிவெள்ளத்துள் மூழ்கியது திருகோணமலை!

## கரைபுரண்டோடுகிறது விடுதலை உணர்ச்சி!

யூலை 9, 10ம் நாட்களில் திருகோணமலையில் நடைபெறும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாட்டையொட்டி, நாடு நகரமெங்கும் மடைதிறந்த வெள்ளம்போல் தமிழின விடுதலை உணர்ச்சியும், எழுச்சியும் எங்கும் பொங்கிப் பிரவாகித்து கரை புரண்டோடுகின்றன. திருகோணமலை நகரம் உதய சூரியனின் ஒளிவெள்ளத்தால் மூடப்பட்டதுபோன்று காணப்படுகிறது. எங்கும் உதயசூரியன் கொடிகள் காணுமிடமெங்கணும் நீக்கமறப் பறந்து தமிழ் ஈழ விடுதலை முழக்கத்தை எழுப்பிக் கொண்டிருக்கின்றன.

மாநாட்டில் கலந்துகொள்வதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிநிதிகளும், பொதுமக்களும் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னூர், மட்டக்களப்பு அம்பாறை, கல்முனை, போன்ற தமிழ் ஈழத்தின் நான்குபுறமிருந்தும் திருகோணமலை நோக்கி வந்து குவிந்துள்ளனர். கொழும்பு நீர்கொழும்பு, மலையகம் ஆகிய இடங்களிலிருந்தும் பல நூற்றுக் கணக்கானோர் திருகோணமலையில் திரண்டுள்ளனர்.

9ம் திகதி வெள்ளி பிற்பகல் 3 மணிக்கு தந்தை செல்வா தமிழர் விடுதலைக் கூட்டணியின்தேசியக்கொடியை ஏற்றிவைக்கும் நிகழ்ச்சியுடன் மாநாடு ஆரம்பமாகும்.

10ம் திகதி காலை நடைபெறும் தொழிலாளர் மாநாட்டுக்கு 'சந்திரன் அரங்கு' என்றும், 9ம் திகதி இரவு கலை நிகழ்ச்சி இடம்பெறும் அரங்குக்கு "அமரர் ஏகாம்பரம் அரங்கு" என்றும், 10ம் திகதி மாலை முற்றவெளி மைதானத்தில் நடைபெறும் மாபெரும் பொதுக் கூட்ட அரங்குக்கு "அமரர் இராசவரோதயம் அரங்கு" என்றும் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

9ம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் நடைபெறும் விடு*லோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் போராட்டப் பிரகடனம், 10ம் திகதி மாலை நடைபெறும் பொதுக்கூட்டத்தில் பகிரங்கப்படுத்தபடும். விஷ

—5-ம் பக்கம் பார்க்க

# கொழுத்த சம்பளம் 500 ரூபா வாங்கும் கூட்டுறவுச் சங்கத் தலைவர்கள்!

## சுதந்திரக் கட்சி அமைப்பாளரின் சுயரூபம் அம்பலம்!

சுதந்திரக்கட்சியின் வடபகுதி அமைப்பாளர்கள் இருவர், இரண்டுக்கு மேற்பட்ட ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்களாக இருந்துகொண்டு கூலி சுலியாக மாதாமாதம் ஐநூறு ரூபா ஊதியம் பெற்று வருகின்றனர் என்ற இரகசியம் இப்போது அம்பலமாகிவிட்டது: இப்படி ஐநூறு ரூபா ஊதியம் பெறும் அமைப்பாளர்கள் ரி. பி. முருகையாவும், கு. விநோதனுமே!

தேசிய அரசுப் பேரவையில் உணவு கூட்டுறவு சிறுகைத்தொழில் அமைச்சரிடம் தேசிய அரசுப் பேரவையில் காவலூர் பா. உ. பண்டிதர் இரத்தினம் கேட்ட கேள்வியொன்றைத் தொடர்ந்தே மேற்கண்ட உண்மை அம்பலமாகிற்று.

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ப. நோ. கூ சங்கங்களில் தலைவர்களாய் இருப்பவர்களின் பெயர்களையும் அவர்கள் ஒவ்வொருவரும் மாதந்தோறும் ஊதியமாகப் பெறும் தொகைகளையும் கூறுமாறு அமைச்சரிடம் திரு கா.பொ. இரத்தினம் கேட்டிருந்தார்.

இலங்கை முழுவதிலும், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்களாக, இரண்டு தேசிய அரசுப் பேரவை உறுப்பினர்களும், ஒரு உதவி அரசாங்க அதிபரும், இரண்டு சிறீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர்களும் கடமையாற்றுகிறுர்கள் என்றும், இவர்களுக்குள் அமைப்பாளர்கள் மட்டுமே இதற்காக ரூபா ஐநூறு மாதாந்த ஊதியமாக பெறுகிறுர்கள் என்றும், இவர்கள் திருவாளர்

—5-ம் பக்கம் பார்க்க

# தமிழ் இளைஞர் பேரவை கொழும்பில் நடாத்தும் மாபெரும் கூட்டம்

எதிர்வரும் 12-7-76 திங்கட்கிழமை மாலை 6 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் தமிழ் இளைஞர் பேரவையின் கொழும்புக் கிளையினர் ஓர் மாபெரும் பொதுக்கூட்டத்தை நடத்துகின்றனர். இக்கூட்டத்துக்கு 45 நாட்கள் சிறையிலிருந்து விட்டு பிணையில் விடுதலையாகிவந்திருக்கும் பேரவையின் கொழும்புக்கிளைத் தலைவர் திரு. ஆ. ரகுபதி பாலசிறீதரன் தலைமை வகிப்பார். நாவலர் அ. அமிர்தலிங்கம், கடமைவீரர் வ. ந. நவரத்தினம், கர்மவீரர் க துரைரத்தினம், செந்தமிழ்ப் பண்டிதர் கா. பொ இரத்தினம் ஆகிய நான்கு தலைவர்களும் சிறப்பு சொற்பொழிவு ஆற்றுகின்றனர்.

இச்சிறப்பு சொற்பொழிவுகளை கேட்கவிரும்புவோர் மண்டப வாயிலில் அதற்கான அனுமதிச் சீட்டுக்களை பெற்றுக்கொள்ளலாம் என்று இளைஞர் பேரவையினர் அறிவிக்கின்றனர்.

## சுதந்திரத்தின் தத்துவம்

"யாவரும் சமமாகச் சிருஷ்டிக்கப்பட்டனர். அவர்களுக்கு ஆண்டவன் பராதீனப்படுத்த முடியாத சில உரிமைகளை வழங்கினுன். வாழ்வு விடுதலை, சந்தோஷ நாட்டம் என்பன அவற்றுள் அடங்கும் இவ்வுரிமைகளை அடையவே மனிதர்களிடையே அரசாங்கங்கள் அமைக்கப்படுகின்றன. ஆளப்படுபவர்களின் சம்மதத்திலிருந்தே அவை தங்கள் நியாயமான அதிகாரங்களைப் பெறுகின்றன."

—அமெரிக்க தூதுவர் அமெரிக்காவின் 200வது சுதந்திர தினச்செய்தியில் (ஜூலை 4) கூறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தலைவர்களுக்கு எதிராக சிறீலங்கா குடியரசு தொடுத்துள்ள வழக்கு:

அவசரகாலச் சட்டவிதிகளை மீறியதாக தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களான திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், வி. என். நவரத்தினம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், க. துரைரத்தினம், ஆகியோருக்கு எதிராக சிறீலங்கா குடியரசின் சார்பில் சட்டமா அதிபதியினால் தொடரப்பட்டுள்ள வழக்கு (TRIAL AT BAR) விசாரணை நீதிபதிகள் குழாமின் முன்னர் மீண்டும் நாளை (12.7.76) நடைபெறவிருக்கிறது. அத்தினத்தில் சாட்சியங்கள் பதிவுசெய்யப்படவிருக்கின்றன.

இவ்வழக்கில் குற்றம்சாட்டப்பட்டுள்ள தமிழ் தலைவர்களின் சார்பில் மூதறிஞர் தந்தை செல்வா தலைமையில் கியூ.சிக்களான திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், குறெசெட் தம்பையா, எம். திருச்செல்வம், பி. நவரத்தினராஜா, கதிர்காமர் ஆகிய சட்ட மேதைகளும், மற்றும் ஏராளமான சட்டத்தரணிகளும் ஆஜராகின்றனர்.

## குற்றப்பத்திரிகையும் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணமும்!

இச்சமயத்தில் சுதந்திரன் வாசகர்களுக்கு நினைவூட்டுவதற்காக 18 6.76ல் சட்டமாஅதிபதியினால் தமிழ்த் தலைவர்களிடம் கையளிக்கப்பட்ட குற்றப் பத்திரிகையையும் அரசாங்கத்தரப்பில் சாட்சியளிப்பவர்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தையும் அப்படியே கீழே தருகிறோம்.

### சாட்டப்பட்ட குற்றங்கள்

(1) ஸ்ரீலங்காவின் அரசிலமைப்புச்சட்டத்தை மீறும்படி அல்லது அதற்கு விரோதமாக நடக்கும்படி எவரையும் தூண்டக்கூடிய, "தமிழர் கூட்டணியின் முதலாவது மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்" என்ற தலைப்புக்கொண்ட ஆவணமொன்றை 1976ம் ஆண்டு மே 22ம் திகதி தமது சொந்தத்தில் தமிழ்த் தலைவர்கள் நால்வரும் வைத்திருந்தார்கள்.

(2) அரசியல் சட்டத்துக்கு எதிராக மக்களைத் தூண்டக்கூடிய "தமிழர் கூட்டணியின் முதலாவது மாநில நாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்" என்ற தலைப்புக்கொண்ட மேற்படி ஆவணத்தை பொதுமக்களுக்கு விநியோகித்தார்கள்.

(3) மேற்கண்ட ஆவணத்தை பொலீஸ் மாஅதிபரினதோ அல்லது வேறு பொலீஸ் அதிகாரிகளினதோ முன் அனுமதி பெறாமல் விநியோகித்தார்கள்.

(4) மேற்படி ஆவணத்தை பொதுமக்களுக்கு வாசித்துக்காட்டியதன்மூலம் ஸ்ரீலங்கா குடிமக்களில் ஒரு பகுதியினரான தமிழ் பேசும் மக்களை சட்ட விரோதமான நடவடிக்கையின் மூலம், ஏற்கனவே சட்டமாகியிருக்கும் ஸ்ரீலங்கா ஒற்றையாட்சிக் குடியரசை மாற்றியமைக்க வேண்டும் என்ற கிளர்ச்சியை தூண்டிவிட முயற்சித்தார்கள்.

(5) மேற்கண்ட துண்டுப் பிரசுரத்தை அல்லது ஆவணத்தை வாசித்துக்காட்டியதன் மூலம் இலங்கைக் குடிமக்களின் ஒரு பகுதியினரான தமிழ் பேசும் மக்களிடையே அதிருப்தியை தூண்டிவிட முயற்சித்தார்கள்.

மேற்கண்ட ஐந்து குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலேயே வழக்கு விசாரணை நடைபெறவிருக்கிறது. இந்த ஐந்து குற்றங்களையும் அவசரகாலச்சட்ட விதிகளுக்கு மீறி குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் செய்துள்ளனர் என்று குற்றப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

### அரசுதரப்பு சாட்சியங்கள்

அரசு தரப்பில் பின்வருவோர் சாட்சியங்கூற அழைக்கப்படுவார்கள்.

(1) சி. தர்மராஜா, உதவி பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் தலைமை நிலையம், கொழும்பு;

(2) பொலிஸ் சார்ஜன் (5901) சம்சுத்தீன், யாழ் பொலிஸ் நிலையம்.

(3) க. சண்முகநாதன், சண்முகா அச்சக உரிமையாளர், சங்கிலித்தோப்பு.

### சமர்ப்பிக்கப்பட்ட பொருட்கள்

"தமிழர் கூட்டணியின் மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்" என்ற தலைப்புடன் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணம் வருமாறு!—

"சரித்திரத்திற்கு முற்பட்ட காலம் முதல் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வளவை நதியிலிருந்து சிலாபம் வரைக்கும் தெற்குப் பகுதிகளிலும் மத்திய பிரதேசத்திலும் சிங்கள மக்களும் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மக்களும் வாழ்ந்து இந்நாட்டின் ஆளுகையைச் சிங்களத் தேசிய இனமும் தமிழ் தேசிய இனமும் தமக்குள் பகிர்ந்து வந்தபடியாலும்—

சிங்கள இராச்சியங்களோடு தொடர்பற்ற வகையில் 1619ம் ஆண்டு போர்த்துக்கீசரால் தமிழ் இராச்சியப் யுத்த களத்தில் தோற்கடிக்கப்பட்டுக் கைப்பற்றப்பட்டு அவர்களிடமிருந்து ஒல்லாந்தாலும் பின்னர் ஆங்கிலேயராலும் தனித்தனியாக வெற்றி கொள்ளப்பட்டபடியாலும்,

சிங்கள இராச்சியங்களின் பிரதேசங்களையும் தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களையும் வேறுவேறாக ஆட்சி செய்துவந்த ஆங்கில ஏகாதிபத்திய வாதிகள் 1833ம் ஆண்டு கோல்புறுக் ஆணைக்குழுவின் சிபார்சுப்படி தம் நிர்வாகவசதி கருதி வலுக்கட்டாயமாக இப்பிரதேசங்களை ஒன்றாக இணைத்த படியாலும்,—

ஏகாதிபத்திய ஆட்சியிலிருந்து இலங்கையை விடுவிப்பதற்கான விடுதலைக் கிளர்ச்சியில் தமிழ்த் தலைவர்கள் முன்னோடிகளாக உழைத்து இறுதியில் 1948ம் ஆண்டு இலங்கை சுதந்திரமடைந்தபடியாலும்,—

மேற்கூறப்பட்ட சரித்திர உண்மைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டு எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்ற அடிப்படையில் முழு நாட்டின் மீதுமான அரசியல் அதிகாரம் சிங்களத் தேசிய இனத்தின் கைக்கு மாற்றப்பட்டு அதனால் தமிழ்தேசிய இனம் அடிமை இனமாகத் தாழ்த்தப் பட்டபடியாலும்,—

சுதந்திரம்பெற்ற நாள் முதல் ஆட்சிக்கு வந்த சிங்கள அரசாங்கங்கள் எல்லாம் சிங்கள மக்களின் தீவிர இனவாதத்தைத் தூண்டி வளர்த்துத் தம் அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களுக்குப் பாதகமாக—

1. தமிழ் மக்களில் ஒரு பங்கினரின் குடியுரிமை, வாக்குரிமைகளைப் பறித்து அதனால் பாராளுமன்றத்தில் தமிழரின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதற்கும்—

2. திட்டமிட்டு அரசாங்க உதவியுடன் நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களாலும் இரகசியமாக ஊக்கிவிடப்பட்ட சிங்களக் கள்ளக் குடியேற்றங்களைச் சட்ட பூர்வமாக அங்கீகரித்ததாலும் பண்டைய தமிழ் இராச்சியத்தின் பிரதேசங்களில் சிங்கள மக்களை நுழைத்து தமிழரைத் தம் சொந்தத் தாயகத்திலேயே சிறுபான்மையினராக்குவதற்கும்,

3. இலங்கை முழுவதும் சிங்களம் மாத்திரமே ஆட்சிமொழியாக்கி தமிழர் மீதும் தமிழ்மொழி மீதும் தாழ்வு முத்திரையைப் பொறிப்பதற்கும்,

4. குடியரசு அரசியல் அமைப்பில் பௌத்த மதத்திற்கு முதன்மையான இடத்தை அளித்து இந்நாட்டில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்களை இரண்டாந்தரத்திற்குத் தாழ்த்துவதற்கும்,

5. கல்வி, தொழில், வேலைவாய்ப்பு, நிலப் பங்கீடு, பொருளாதார வாழ்வின் சகல துறைகளிலும் தமிழ் மக்களுக்குச் சமசந்தர்ப்பத்தை மறுத்தும் பெருமளவிலான கைத்தொழில்கள் அபிவிருத்தித் திட்டங்களில் தமிழ்ப் பிரதேசங்களைப் புறக்கணித்தும் இலங்கையில் தமிழ் மக்களின் வாழ்க்கையே ஊசலாடும் நிலையை ஏற்படுத்துவதற்கும்,

6. இலங்கையில் தமிழ் மொழியையும் பண்பாட்டையும் வளர்க்கும் சந்தர்ப்பங்களை மறுத்து அதே நேரத்தில் தமிழ் நாட்டுக் கலாச்சாரத் தாயகத்தோடு உள்ள தொடர்பையும் திட்டமிட்டுத் துண்டித்துக் கலாச்சார இனக்கொலையை நோக்கி ஈழத்தமிழ் மக்களைத் தள்ளுவதற்கும்,

7. 1956ம் ஆண்டுகொழும்பிலும் அம்பாறை முதலிய இடங்களிலும் நடந்ததுபோன்றும், 1958ம் ஆண்டு நாடு முழுவதும் மிகப்பெருமளவில்நடந்ததுபோன்றும், 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஒன்பதின்மர் உயிர் துறக்கக் காரணமான காவல் படையின் காரணமற்ற தாக்குதல் போன்றும், 1976ம் ஆண்டில் புத்தளத்திலும் இலங்கையில் வேறு பலபாகங்களிலும் காவல் படையினரும் சிங்கள வகுப்பு வெறியரும் தமிழ்பேசும் முஸ்லிம்கள் மீது நடத்திய தாக்குதல் போன்றும் தமிழ் பேசும் மக்கள் மீது வகுப்புவெறிப் பலாத்கார நடவடிக்கைகளையும் பயமுறுத்தல் நடவடிக்கைகளையும் அனுமதித்தும் கட்டவிழ்த்துவிட்டும் தமக்கு இழைக்கப்படும் அநீதிகளைத் தமிழ் பேசும் மக்கள் எதிர்த்து நிற்கும் ஆண்மையை அழித்துப் பீதியை ஏற்படுத்துவதற்கும்,—

8. தமிழ் இளைஞர்களை எவ்வித நியாயமோ நீதி விசாரணையோ இன்றித் தாக்கியும் சித்திரவதை செய்தும் வருடக்கணக்கில் சிறைச்சாலைகளில் அடைத்து வதைத்தும்,

9. எல்லாவற்றிற்கும் மேலாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் சுதந்திரமாக விவாதிக்கும் சந்தர்ப்பமின்றி, பிரஜா உரிமைச் சட்டங்களினால் பிரதிநிதித்துவ விகிதாசாரமே மாற்றப்பட்டுச் சிங்களப் பெரும்பான்மைக்கு விகிதாசாரத்திற்கும் கூடிய பிரதிநிதித்துவம் கொண்ட பாராளுமன்றத்தை அரசியல் நிர்ணய சபையாக்கி, தமிழ் மக்களுக்கு முந்திய அரசியல் அமைப்பின் கீழ் எஞ்சியிருந்த சிறு பாதுகாப்புக்களையும் நீக்கி, அடிமைத் தளையை இறுகப் பூட்டிய குடியரசு அரசியல் அமைப்பை அவர்கள்மீது திணிப்பதற்கும்,

தமது அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்தி வருவதாலும்,

பல்வேறு தமிழ் அரசியற் கட்சிகளும் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கு அரசாங்கங்களோடு ஒத்துழைத்தும், பாராளுமன்றத்துக்கும் உள்ளும் வெளியும் கிளர்ச்சி செய்தும், தமிழ் மக்கள் தன் மானத்தோடு வாழக்கூடிய ஆகக்குறைந்த அரசியல் உரிமைகளையாவது நிலைநாட்டுவதற்கு அடுத்தடுத்து வந்த சிங்களப் பிரதமர்களுடன் செய்துகொண்ட ஒப்பந்தங்களும் பயனற்றுப் போனபடியாலும்,

ஒற்றையாட்சியில் பெரும்பான்மைச் சமூகம் சிறுபான்மைச் சமூகங்களை நசுக்காதவாறு பாராளுமன்றத்தில் சமபல பிரதிநிதித்துவத்தைப் பெறுவதற்கு அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் எடுத்த பெரும் முயற்சி தோல்வி கண்டதோடு, எந்தவொரு சமூகத்திற்கும் பாதகமான சட்டங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுவதைத் தடைசெய்யும் பொருட்டு சோல்பரி அரசியல் திட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 29வது விதியின் அற்ப பாதுகாப்பும் குடியரசு அரசியல் அமைப்

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்று தணியுமிந்த சுதந்திர தாகம்?

**அன்பு நண்பா,**

விடுதலை முரசு முழங்குகிறது; சுதந்திர சங்கநாதம் எழுகிறது; எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் ஈழமென்று முழங்கியபடி தங்கத் தமிழ்க் காளையரும் கன்னியரும், ஆடவரும் பெண்டிரும் மாணவரும் மற்றையோரும் கூடுகிறார் இந்தக்கிழமை—ஆடி 9ம் 10ம் நாட்களில் — திருகோணமலையில்!

அடிமையிருளைக் கிழித்தெறிய உதயமான உதயசூரியன் கொடியின் அரவணைப்பில் உத்வேகம் மிக்கோராய் ஈழத்தமிழர் கூடுகிறார்—இதயமடங்கும் எழுச்சி பொங்கிட! இன்பத் தமிழ் ஈழம் எங்கள் இதயகீதம் — இதனைவிட்டால் வேறு எமக்கில்லை வேதம் என்று எழுச்சிப் பண்பாடியபடி — எதையும் தருவோம் — இன்னுயிரும் தருவோம் — பெறுவோம் எங்கள் பெருந்தமிழ் ஈழம் என ஆர்த்தெழுந்து கூடுகிறார் — அணி அணியாய் திரளுகிறார் கோணமாமலையிலே!

போர் முரசு கேட்கிறது — கார் முகில் கண்ட கலாபமயில் தோகை விரித்தாடுவது போல் போர் முரசு கேட்டு தோள்தட்டி நெஞ்சு நிமிர்த்தி களம் நோக்கிச் செல்கிறார் இளையோர். தனது மகனைப் போர்க்களம் அனுப்பிவிட்டு, அடுத்த வீட்டு அன்னையிடம் சென்று அளவளாவுகிறாள் ஒரு தாய்! எல்லா வீட்டுப் பிள்ளைகளும் போர்க்களம் சென்றுவிட்டார்களே — எங்கே அம்மா உன் வீட்டுப் பிள்ளையென்று கேட்கிறாள்; அதற்கு அந்த மூதாட்டியோ சிரித்துவிட்டு இவ்வாறு கூறுகிறாளாம்—

சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன்
யாண்டுளனோ என வினவுதி என் மகன்
யாண்டுளனாயினும் அறியேன்; ஒரும்
புலிசேர்ந்து போகிய கல்லளைபோல
ஈன்றவயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ
போர்க்களந்தானே!

"எனது மகன் எங்கேயென்று கேட்டாய்—அவன் எங்கேயென்பதை நானறியேன்; புலி போன்ற அவனைப் பெற்ற வயிறு இங்கே இருக்கிறது; அவனோ சரியான சமயத்தில் போர்க்களத்தில் தோன்றுவான்" என்கிறாள் இந்த புறநானூற்றுத்தாய்!

இந்தப் புறநானூற்றுத் தாயையும் விஞ்சக்கூடிய விதத்தில், நம் தமிழ் ஈழத் தாய்மார்கள், தாம்பெற்ற ஆண்மக்களை மட்டுமல்ல பெண்மக்களைக்கூட போர்க்களம் அனுப்புவதற்கு இன்று துணிந்துவிட்ட நிலையிலே— தியாக வீரத்தில் தோய்ந்தபடி திருகோணமலையிலே கூடுகின்றார்!

ஆம் நண்பா, இரண்டு திங்களுக்குமுன் வட்டுக்கோட்டை மாநாட்டிலே நாம் விடுத்த கொள்கைப் பிரகடனம் கேசலேந்திகளை ஒரு கலக்கு கலக்கியதுமட்டுமன்றி, தமிழ் ஈழக் கொள்கையிலே நாம் கொண்டிருக்கும் குன்றாத உறுதியை — குலையாத இலட்சியப் பிடிப்பை — உலகத்துக்கு எடுத்துக் காட்டியது; 'தமிழ் ஈழம்' என்பது சலுகை பெறுவதற்காக முன்வைக்கப்படும் ஒரு கோரிக்கையல்ல; அது நம் இரத்தத்தோடு இரத்தமாக கலந்துவிட்ட ஒன்று; மாற்றமுடியாத இறுதி முடிவு; என்பதை வட்டுக்கோட்டையிலே நாம் எடுத்த பிரகடனம், சிங்கள இனத்துக்கும், அகில உலகத்துக்கும் நமது நிலையை ஐயந்திரிபற எடுத்துக்காட்டியது, சந்தேகக் கண்கொண்டு நம்மைப் பார்த்தவர்கள், முக்காடிட்டுக் கொண்டு மூலையில் ஒதுங்கினர். தமிழ் ஈழ முழக்கம் நாடெலாம் எழுந்து, இன்றைக்கு கோழையையும் வீரனாக்குகிறது; கூனனையும் நிமிர்ந்து உட்காரவைக்கிறது!

வட்டுக்கோட்டைப் பிரகடனத்தை துண்டுப்பிரசுரமாக அச்சிட்டு, கடந்த மே 22ம் நாள் நமது தலைவர்கள் விநியோகித்தபோது, அவர்களில் நால்வர் கைதுசெய்யப்பட்டு, பத்து நாள் தடுப்புக்காவலின் பின்னர், இன்று நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டிருக்கிறது; ஆம், நமது விடுதலைப் போராட்டம், வட்டுக்கோட்டை பிரகடனத்துடன் ஆரம்பமாகிவிட்டது! இந்தப் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கான திட்டங்கள், வியூகங்கள், முறைகள், வழிகள் பற்றிய இறுதி முடிவுகள் திருகோணமலையிலே பூரணமாக்கப்படவிருக்கின்றன!

திருகோணமலையிலே இந்த மாநாடு கூட்டப்படுவது—நமது விடுதலைக்காக எவ்வளவு தூரம் விரைந்து நாம் பணியாற்றவேண்டிய நிலையிலிருக்கிறோம் என்பதை நமக்கு இடித்துரைப்பதாக இருக்கிறது! திருகோணமலையிலே இன்று நாம் மாநாடு கூட்டுகிறோம்—இராவணன் ஆண்டமண் — சம்பந்தர் பாடல் பெற்ற மண் — இயற்கைத் துறைமுகம் எழிலூட்டும் மண் — நன்செய் நிலங்களும் புன்செய் நிலங்களும், சோலைகளும் வாவிகளும் நிறைந்த மண் — என்றெல்லாம் பரவசப்படுகிறோம் — ஆனால் இன்றைய நிலை என்ன? பழம் பெருமை பேசிக்கொண்டிருந்தால் நம் பழந் தமிழ் மண்ணைக் காத்திடலாமோ?

யூதர்கள் தங்கள் பழம் பெருமையை மட்டும் பேசிக்கொண்டிருக்கவில்லை. பழம் பெருமையை அடித்தளமாகக்கொண்டு, புதிய வேகத்துடன் செயற்பட்டார்கள்—அதனால்தான் உகண்டாவிலுள்ள என்டப் விமான நிலையத்தில் தனது குடிமக்களைக் காப்பாற்ற இஸ்ரேலிய யூதர்கள் வீர சாதனையை இன்று புரிய முடிந்தது; ஒரு காலத்தில் நாடின்றி அடிமைகளாகக்கிடந்த 25

## அரசியல் மேடை

இலட்சம் இஸ்ரேலிய யூதர்கள், உலகத்தையே ஒரு கலக்கு கலக்கி — இன்று தமது வீரத்தை நிலைநாட்டி—மாற்றாரும்போற்றும் வண்ணம் உயர்ந்தோங்கி நிற்கிறார்கள் என்றால் அவர்களிடமிருந்து தமிழினம் படிக்க வேண்டிய பாடங்கள் தாம் எத்தனை?

திருகோணமலையில் இன்று மாநாடு கூட்டும் நாம்—இன்னும் ஐந்தோ பத்தோ ஆண்டுகளில் இப்படியொரு மாநாட்டை அங்குகூட்ட முடியுமா என்ற கேள்வியை ஒவ்வொரு தமிழனும் எழுப்பவேண்டும். ஏனெனில் இன்றைய நிலை நீடித்தால் — இன்னும் ஐந்தோ பத்தோ ஆண்டுகளில் திருகோணமலை ஒரு சிங்களப் பிரதேசமாகிவிடும்! திருகோணமலையின் பா. உ. ஓர் சிங்களவராக இருப்பார்; பின்னர் திருகோணமலைப் பக்கம் தமிழன் தலைவைத்துப் படுக்கக்கூட முடியாத நிலைமையன்றோ தோன்றிவிடும்?

எவன் திருகோணமலையைக் கட்டியாள்கிறானோ—அவன் இந்து மா சமுத்திரத்தையே கட்டியாள்கிறான் என்றான் மாவீரன் நெப்போலியன்; அத்தகைய திருகோணமலையை சிங்களவனுக்கு தாரைவார்த்து விடுவோமானால் — அதன் பின்னர் தமிழ் ஈழத்தின் விடுதலையை வென்றெடுப்பதும் சிரமமானதாகிவிடும்! எனவே, அடுத்த ஐந்து அல்லது பத்து ஆண்டுகளுக்குள் திருகோணமலையையும் உள்ளடக்கிய தனித்தமிழ் ஈழம் உருவாகினால்மட்டுமே தமிழன் மீட்சிபெற முடியும்! இந்த அடிப்படை உண்மையை பறிபோய்க்கொண்டிருக்கும் திருகோணமலை நமக்கு எடுத்தோதிக்கொண்டிருக்கிறது! திருக்கோணமலையில் நடைபெறும் நமது மாநாடும் இதையுணர்ந்து தமிழ் ஈழப் போராட்டத்தை வேகமுடன் நடத்துவதற்கு ஏற்ற பல திட்டங்களைத் தீட்டிடவேண்டும்!

விடுதலையென்பது கேட்டவுடன் வெள்ளித்தட்டில் வைத்து பெற்றுக்கொள்ளக்கூடிய பொருளல்ல; அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்கள் தூக்கிவந்து தரக்கூடிய ஒரு வஸ்துவுமல்ல; விடுதலைக்காக ஒவ்வொரு தமிழனும் உழைக்கவேண்டும்; ஒவ்வொரு தமிழனுக்கும், தமிழச்சிக்கும் விடுதலை இயக்கத்திலே பங்கு உண்டு!

இரத்தம், வியர்வை, கண்ணீர், துன்பம், வறுமை, பிணி, சிறை, சித்திரவதை, சாக்காடு இவையே — விடுதலைக்கு நாம் விலையாகத்தரவேண்டிய பொருட்கள்! இவற்றையெல்லாம் தியாக பலிபீடத்தில்வைத்து — என்று தணியுமெங்கள் சுதந்திர தாகம் என்று கேட்டபடி எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் இன்று தங்களை தாங்களே அர்ப்பணித்துக்கொண்டிருக்கிறார்கள்! தமிழ் ஈழ விடுதலைக்காக—தாயகத்தின் மீட்சிக்காக தூக்கு கயிற்றை முத்தமிடவும் —மரணத்தை அணைக்கவும், உண்ணாநோன்பிருந்து உயிர் துறக்கவும் அவர்கள் சித்தமாக இருக்கிறார்கள்'

லண்டனிலும், ஏனைய வெளிநாடுகளிலுமுள்ள தமிழ் ஈழத்து இளைஞர்கள், தங்கள் தாயகத்தின் விடுதலைப்போராட்டத்துக்கு வெளிநாடுகளின் தார்மீக ஆதரவையும் உதவியையும் திரட்டுவதற்கு இரவு பகலாக பாடுபட்டுழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது முயற்சியின் விளைவாகத்தான், இலண்டனிலியங்கும் சர்வதேச இயக்கமான சிறுபான்மை உரிமைக்குழு (Minority Rights Group)வைச் சேர்ந்த மைக்கல் ஸ்கொட், லிபரங்கட்சியைச் சேர்ந்த றிச்சார்ட் ஹேரன் போன்றவர்கள், ஈழத்தமிழர் போராட்டத்துக்கு சர்வதேச அரங்கில் ஆதரவு பெற்றுத்தர தாம் முழு முயற்சியும் எடுப்பதாக வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள்!

இந்த நிலையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் பொறுப்பும் கடமையும் மகத்தானது; இதுகாலவரை தமிழர் விடுதலைக் கூட்டணியும் கூட்டணியிலிணைந்திருக்கும் அரசியற்கட்சிகளும் நடத்திவந்த அரசியல் வேறு; இன்று நாம் ஓர் விடுதலை இயக்கத்தை—புனிதமான சுதந்திரப்போரை நடத்துவதற்கு நம்மைநாம் ஒப்புக்கொடுத்திருக்கிறோம்! ஆகவே கூட்டணி — கட்டுப்பாடான-தலைமையைக்கொண்ட வலுவான ஒரே அமைப்பாக — முழு விடுதலை இயக்கமாக மாறவேண்டும்! முழுநேர ஊழியர்களாக பலர் மாறவேண்டும்!! சொல்லில் மட்டுமன்றி செயலிலும் தமிழ் தேசியத்தை நமது தலைவர்களும் ஏனையோரும் கைக்கொள்ளவேண்டும்!

ஆம்—தேசிய விடுதலை உணர்ச்சியை தட்டியெழுப்புவதற்கு ஒரே வழி தேசிய கலாச்சாரப் புரட்சியை மக்களிடையே ஏற்படுத்துவதுதான்! தமிழ் தேசிய கலாசாரப் புரட்சியை தமிழ் மக்களிடையே ஏற்படுத்தவேண்டும்! இதற்கு திருகோணமலை மாநாடு வழிவகுத்திடவேண்டும்!

"இதந்தரு மனையினீங்கி
இடர் மிகு சிறைப்பட்டாலும்
பதந்திரு இரண்டும் மாறி
பழிமிகுந் திழிவுற்றாலும்
விதந் தரு கோடியின்னல்
விரைந்தெனை வருத்திட்டாலும்
சுதந்திர தேவி நின்னை
தொழுதிடல் மறக்கிலேனே"

என்று பாரதியின் பண்ணிசைத்தபடி—'வந்தே மாதரம்' என்னும் முழக்கத்தை இந்திய சுதந்திரப்போராட்ட வீரர்கள் எழுப்பி எழுச்சி பெற்றதுபோல 'தமிழ் ஈழம் வாழ்க' எனும் இலட்சிய முழக்கத்தையெழுப்பியபடி—சுதந்திர அன்னையின் அருளைத்தேடி புனிதயாத்திரை புரியும் ஈழத்தமிழினம்—திருகோணமலை மாநாடு தரவிருக்கும் கட்டளையை சிரமேற்கொண்டு விடுதலைவேள்வியில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளுமாக!

"தமிழ் எங்கள் உயிர் என்பதாலே
வெல்லும் தரமுண்டு தமிழனுக்கு
இப்புவிமேலே"

உன் அன்பு தோழன்.

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணம்

# "சுதந்திர சமுதாயமாக வாழுவதற்கு ஈழத்தமிழ் சமுதாயத்தை பக்குவப்படுத்தவேண்டும்!"

## வேஷத்தைக் கலைப்போம்!

1972ம் ஆண்டு மே 22ம் நாள் புதிய குடியரசு அரசியல் சட்டம் வந்த நேரம் தொடக்கம் — தமிழ் தேசிய இனத்தின் அடிமைச் சங்கிலி இறுக்கப்பட்டதை பிரத்தியட்சமாக நிரூபிக்கின்றவகையில்கடந்த நான்குஆண்டுகளாகதமிழ்ஈழத்துஇளைஞர்கள்ஏராளமானோர்'சிறீலங்காவின்'' கொடிய சிறைச்சாலைகளுக்குள் நீதி விசாரணை ஏதுமின்றி பூட்டி வைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது நாடும் நானிலமும் அறிந்த சங்கதியாகும்.

நாகரிக அரசியல் முறைகளுக்கும் —ஐக்கிய நாடுகள் சபையின் கோட்பாடுகளுக்கும் — ஏன் 'சிறீலங்கா'வின் அரசியல் சட்டத்துக்கும் விரோதமான முறையில் தமிழ் ஈழத்து இளைஞர்களை நீதி விசாரணையின்றி சிறைக்குள் தள்ளிப்பூட்டி வைத்து அவர்களது வாழ்வைப் பாழாக்கிவருகிறது 'சிறீலங்காவின்' இன வெறியரசு!

இந்த இளைஞர்களை விடுதலை செய்வோம் — அல்லது நீதிவிசாரணைக் குட்படுத்துவோம் என்று அனைத்து உலக இயக்கமான ''இன்டர் நாஷனல் அம்னெஸ்டி''யின் தலைவருக்கு அளித்தவாக்குறுதியைக்கூட காற்றில் பறக்கவிட்டு தமிழ் இளைஞர்களின் வாழ்வை வீணே சிறைகளில் சிறுகச் சிறுக அழித்து வருகிறது சிங்கள அரசு.

இவ்வாறு சிங்கள ஆட்சியின் கொடூரப்பசிக்கு பலியாகியுள்ள தமிழ் இளைஞர்களில் ஒருவராகிய அமரசிங்கம் என்பவர் எதிர்வரும் பன்னிரண்டாந்தேதியுடன்—அதாவது நாளையுடன்—நான்கு நீண்ட ஆண்டுகளை சிறைச்சாலைக்குள் கழிக்கிறார். விசாரணை ஏதுமின்றி நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக தமிழ் இளைஞர் ஒருவரைச் சிறைக்குள் வைத்துப் பூட்டி வைத்திருக்கிறது இலங்கையரசு என்றால்—இந்த அரசுமீது நாகரிக நாடுகள் காறியுமிழவேண்டாமா? தென்னாபிரிக்க அரசையும், தெற்கு றொடீசிய அரசையும் இனவெறி அரசுகள் (Racist Govt.) என்று ஒதுக்கிவைப்பதுபோல இலங்கை அரசையும் ஒதுக்கிவைக்க வேண்டாமா?

அமரசிங்கத்தைப் போலவே ஏராளமான தமிழ் இளைஞர்கள் ஆண்டுக்கணக்காக இவ்வாறு சிறைச்சாலைகளில் பூட்டிவைக்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்த இளைஞர்களின் விடுதலைபற்றி தேசிய அரசுப் பேரவையில் திரு. வி. தர்மலிங்கம் கேட்டபோது, பாதுகாப்பு கருதியே இவர்கள் இவ்வாறு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு துணையமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி பதிலளித்திருக்கிறார்.

யாருடைய பாதுகாப்புக்கு? என்று நாம் துணையமைச்சரிடம் கேட்க விரும்புகிறோம்.

**நாட்டின் பாதுகாப்புக்கு இந்த 42 தமிழ் இளைஞர்களாலும் தான் ஆபத்து நேருமென்றால்—அரசு கட்டிலில் இருப்பவர்கள் தூக்குப்போட்டுக்கொள்ள வேண்டும்!**

பொலிஸ், தரைப்படை, விமானப்படை, கடற்படை, எண்ணற்ற ஆயுதங்கள், நவீன துப்பாக்கிகள், குண்டுகள் ஆகியவற்றை குவித்து வைத்துக்கொண்டு அதிகார பீடத்தில் அமர்ந்திருக்கும் சிங்கள ஆட்சியாளர், கத்தியின்றி இரத்தமின்றி நியாயமான பிறப்புரிமைக்காக போராடும் 42 தமிழ் இளைஞர்களைக்கண்டு உண்மையிலே அஞ்சுவதாக இருந்தால் தமிழினம் உள்ளபடியே பெருமையடையத்தான் வேண்டும்!

ஆனால் உண்மையில் அரசின் நோக்கம் பாதுகாப்பு என்ற போர்வையில் தமிழ் இன விடுதலைகோரிய இளைஞர்களை பழிவாங்குவதுதான்! அரசியல் காரணங்களுக்காகவே இந்த இளைஞர்கள் பழிவாங்கப்படுகின்றனரே யன்றி—உண்மையில் பாதுகாப்பு காரணங்களுக்காக வல்ல!

ஆயுதமெடுத்துப் புரட்சிசெய்து அரசைக் கவிழ்க்க முயற்சித்த சேகுவேரா இயக்கத்து இளைஞர்களை விடுதலை செய்கிறார்கள்; அது நாட்டின் பாதுகாப்புக்கு ஆபத்தாகத் தெரியவில்லை; ஆனால் அறவழியில் தமது அடிப்படை உரிமைகளைக் கோரிய இளைஞர்களை மட்டும் 'பாதுகாப்பு' என்று காரணம் காட்டி விசாரணையின்றி ஆண்டுக்கணக்காக சிறைக்குள் வைத்திருக்கிறார்கள்; ஏன் இந்த நிலை?

காரணம்—ஆயுதமெடுத்து அரசைக் கவிழ்க்கும் முயற்சியிலீடுபட்டாலும், சேகுவேரா இளைஞர்கள் ஆளும் இனத்தைச்சேர்ந்தவர்கள்; சிங்கள இளைஞர்கள். பின்னவரோ அறவழியில் உரிமைகோரியவர்கள் என்றாலும் — ஆளப்படும் இனத்தைச்சேர்ந்தவர்கள்; தமிழர்கள்!

## கொழும்பில் நவரத்தினம் பேச்சு!

"நம்மை நாம் ஆளுவது என்ற தீர்மானத்தில் நாம் தெளிவுடனும் உறுதியுடனும் இருந்து, வாய்ப்பும் வசதியும் நேரும்போது நமது விடுதலையை வென்றெடுக்கவேண்டும். அதே சமயம் விடுதலை பெற்றபின்னர் பிரச்சினைகளேதுமின்றி ஒன்றுபட்ட சமுதாயமாக தமிழ் சமுதாயம் முன்னேறுவதற்கு, தமிழ் சமுதாயத்திலுள்ள மூடத்தனங்களையும் சீர்கேடுகளையும் அகற்றி ஒன்றுபட்ட சமுதாயத்தை சிருஷ்டிக்கும் பணியில் இப்போதிருந்தே நாம் ஈடுபடவேண்டும். நாம் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற எண்ணத்தை நமது மக்களுக்கு ஊட்டி, அறிவுச்சுடரைக் கொழுத்த வேண்டும். இதுவே நமது இன்றைய பணி!"

இவ்வாறு கொழும்பில் தந்தை செல்வாவின் இல்லத்தில் 7-7-76 புதன்கிழமை மாலை திரு. ஈழவேந்தன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழினம் இன்று தன்னைத்தானே ஆளுகின்ற நிலையைதோற்றுவிப்பதைத் தவிர இந்நாட்டில் வாழ்வதற்கு வேறுவழியில்லை என்ற முடிவுக்கு வந்துவிட்டது. எனவே நாம் இதில் தெளிவு பெறவேண்டும். நமது விடுதலையை நம்மால் வென்றெடுக்கமுடியுமா? வென்றெடுக்கமுடியுமானால் அது எப்படி சாத்தியமாகும்? என்ற கேள்விகளை எழுப்பி நிச்சயமான நம்பிக்கையை நாம்பெற்றுக்கொள்ளவேண்டும்- இந்தநம்பிக்கை—அதாவது அழுத்தமான இலட்சிய நம்பிக்கை நமக்கு ஏற்பட்டு விட்டதென்றால், விடுதலைப் பயணம் இலகுவாகிவிடும். நமது இளைஞர்கள் மனதில் குழப்பமோ, தெளிவின்மையோ இருக்கக் கூடாது.

நமது தமிழ் ஈழ இலட்சியத்தை சாதிப்பதற்கு வழியென்ன? உலகில் கடந்த 20, 30 ஆண்டுகளில் பல புதிய நாடுகள் பூத்திருக்கின்றன. ஒன்றாக இருந்த நாடுகள் பிரிந்து தனித்தனி நாடுகளாகியிருக்கின்றன. மலேசியாவும், சிங்கப்பூரும் மட்டுமே சமாதானமாகப் பிரிந்தன. ஏனைய நாடுகள் யாவும் பீரங்கியுடன் பீரங்கி மோதி — ஜெட்விமானத்துடன் ஜெட்விமானம்மோதி —தனிநாடாக உருவாகின: நம்மை அடக்கியாள நினைக்கும் அரசுடன் அந்த வகையில் போராட நம்மிடம் இன்றைக்கு வல்லமை இருக்கிறதா என்றால்இல்லை. அந்த வல்லமையை நாம் தேடிக்கொள்ளும் மட்டும்— அல்லது அந்த வல்லமை நம்மை நாடி வருமட்டும்— நாம் அஹிம்சை வழியிலேயே நமது இயக்கத்தை கொண்டு நடத்தவேண்டியவர்களாக இருக்கிறோம்.

நம்மை அடக்கியாள நினைப்போரிடம் இருக்கும் அதேயளவு பலம் நமது கைக்கும் வந்து சேரும் வரை — நாம் பலாத்காரத்தைப்பற்றி நினைப்பது நமது இனத்தின் அழிவுக்கே வழி வகுக்கும். தமிழினத்தை பூண்டோடு கொன்றொழிப்பதன் மூலம் தமிழர் பிரச்சினையை தீர்க்கும் சந்தர்ப்பத்தை எதிரிக்கு நாம் சந்தர்ப்பம் அளித்துவிடக் கூடாது.

நமது இலட்சியத்தை நிறைவேற்றிக்கொள்வதற்கு மூன்று வழிகள் இருக்கின்றன. (திரு. நவரத்தினம் எடுத்து விளக்கிய மூன்று வழிகளையும் நாம் இங்கு சுட்டிக்காட்டாமல் விடுகிறோம்.) வங்கதேச சுதந்திரப் போராட்டத்துக்கு வேண்டிய தயாரிப்புக்களை வெளிநாடுகளில் வாழ்ந்துவந்த வங்காளிகளே செய்தார்கள். அதேபோல வெளிநாடுகளில் வாழும் 40,000க்கு மேற்பட்ட தமிழ் ஈழ மக்கள், தங்கள் தாயகத்தின் விடுதலைப் போராட்டத்துக்கு வேண்டிய தயாரிப்புக்களை தாங்கள் வசிக்கும் நாடுகளிலிருந்தே செய்யலாம்; செய்தும் வருகிறார்கள்.

நம்மை அடக்கியாள முனைவோருக்கு அவர்களது முறையிலேயே பதிலடி கொடுக்கக்கூடிய சக்தியை நாம் பெருக்கிக்கொள்ளுமட்டும்; அல்லது தேடிக் கொள்ளுமட்டும், நமது இயக்கங்களை அகிம்சை முறையிலேயே நடாத்திவர வேண்டும். இது விஷயத்தில் தீவிரவாதக் கருத்துள்ள இளைஞர்கள் தெளிவு பெறவேண்டும். தீவிரவாதத்துக்கு யாரும் மாறுபட்டவர்கள் அல்லர்;ஆனால் முட்டாள்தனத்துக்குபெயர் தீவிரவாதம் அல்ல; அறியாமையால் விளக்கில் போய் தானாகவே விழுந்து கருகிச் சாவும் விட்டில் பூச்சிகளாக நாம் இருந்து விடக்கூடாது!

தமிழ் மக்களில் மிகப் பலர் இன்னும் தங்கள் நிலையை உணராது இருக்கிறார்கள். தமிழர் விடுதலை இயக்கத்தில் வெறும் பார்வையாளராக இருக்கிறார்களே தவிர பங்காளர்களாக மாறவில்லை. அவர்களது அறிவுக் கண்ணைத் திறந்து அவர்களையும் சுதந்திர இயக்கத்துக்கு இழுத்துவர நமது இளைஞர்கள் பாடுபட வேண்டும். ஒவ்வொரு தமிழனுக்கும் இதில் தனக்கும் பங்கு இருக்கிறது என்ற எண்ணம் ஏற்படச் செய்ய வேண்டும்.



யூதர்கள் தங்களுக்கென்றொரு நாட்டை உருவாக்குவதற்கு முன்னர், முதலில் செய்தவேலை யூதர்கள் மத்தியிலிருந்து வேறுபாடுகளை களைந்ததுதான். அதேபோல நாம் நம்மைசுதந்திரத்துக்கு அருகதையாக்கிக் கொள்ள, நமது மத்தியில் இருக்கும் ஆண்டான் அடிமை, உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்பனபோன்ற சாதிவேறுபாடுகளை ஒழித்துக் கட்டி தமிழினத்தை ஒன்றிணைத்து நம்பிக்கை கொள்ளச்செய்ய வேண்டும்.

வாரம் ஒரு நாளைக்கு தமது தமது கைப்பட பயிரிட்டு உருவாக்கிய உணவையே உண்பது என்று யூதர்கள் தங்களுக்கு தாங்களே கட்டளையிட்டு, இன்றும் அதைக்கடைப்பிடிக்கிறார்கள். நாமும் இந்தப் பழக்கத்தை மேறகொண்டு, ஒவ்வொரு தமிழனும் தான் தனது கைப்பட சுதந்திரமாக உற்பத்தி செய்த உணவையே வாரமொரு முறை உண்பது என்று முடிவுசெய்ய வேண்டும். இதன் மூலம் சுதந்திர உணர்வு வளரும். அதே சமயம் உற்பத்தியும் பெருகும்.

பாகிஸ்தானுக்கு விடுதலை வேண்டுமா? மூன்று கட்டளையிடுகிறேன்; அவற்றை நிறைவேற்றினால் பாகிஸ்தானுக்கு விடுதலையுண்டு என்று கூறினார் ஜின்னா. அவர் கூறிய முதலாவது விஷயம் — கிளைகளை அமையுங்கள், இரண்டாவது விஷயம் — கிளைகளை அமையுங்கள் மூன்றாவது விஷயமும் கிளைகளை அமையுங்கள் என்பதுதான்.

அதேபோல, ஒவ்வொரு கிராமத்திலும், பட்டி தொட்டியெங்கும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளைகளை அமைத்து சுதந்திர இயக்கத்தை முன்னெடுத்துச் செல்வோம்! அனைவரும் இணைவீர்! கடமையைச் செய்வீர்!

இவ்வாறு திரு. நவரத்தினம் பேசினார்;

**தமிழ் இளைஞர்களை இவ்வாறு இனரீதியில் பாரபட்சமாக சிறைக்குள் தள்ளி கொடுமைப்படுத்தும் இலங்கை அரசின் இனவெறித் தோற்றம் உலக அரங்கில் அம்பலப்படுத்தப்படவேண்டும்!**

அரசின் இந்த இனவெறிப்போக்கைப் பொறுக்க முடியாமற்தான், ஏதோ ஒரு முடிவுக்கு வந்தவர்களாக சிறைச்சாலைகளில் ஆண்டுக்கணக்காக வாடி வதங்கும் தமிழ் இளைஞர்களில் சிலர் சாகும்வரை உண்ணாவிரதமிருப்பதுபற்றியும் சிந்திக்கத் தொடங்கியிருக்கிறார்கள்!

திருகோணமலையில் கூடும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிறப்பு மாநாடு ஏனைய விடயங்களுடன் இளைஞர் பிரச்சினையையும் ஆழ்ந்து சிந்திக்கும் என்று எதிர் பார்க்கிறோம்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "இலங்கைத் தமிழர் போராட்டத்...

—1-ம் பக்கத் தொடர்

லண்டனில் கடந்த 19-6-76 நடைபெற்ற ஈழத்தமிழர் கழகத்தினரின் பொதுக்கூட்டம் பற்றிய செய்தி விமர்சனம் ஒன்றை லண்டன் முரசு யூன் இதழில் மயில்வாகனம் தனபாலன் என்பவர் எழுதியுள்ளார். அதை சுதந்திரன் வாசகர்களுக்கு கீழே தருகிறோம்.

ஒரு தேசிய இனத்தை இன்னொரு தேசிய இனம் ஒற்றையாட்சி என்னும் போர்வையிலே அடக்கி ஆளுவதும் ஒருவிதமான வர்க்கப் போராட்டந்தான் என்னும் கருத்தையே லண்டனில விம்பிள்டன்பார்க் மண்டபத்தில் ஜுன் 19ந் திகதி நடைபெற்றபொதுக் கூட்ட நிகழ்ச்சிகள் தெரிவித்தன.

கூட்டத்தில் கலந்து கொண்டு உணர்ச்சிமயமாகப்பேசிய பலபேச்சாளர்களும் பிரதேசத்தால், மொழியால், பண்பாட்டால், பழக்கவழக்கத்தால், சமயங்களால் சிங்களதேசிய இனத்தில் இருந்து முற்றிலும்வேறுபட்ட தமிழ்த்தேசிய இனம் தன்மானமாக வாழ்வதற்கு அது இழந்த இராச்சியத்தை மீண்டும்பெற்றிட வேண்டுமெனவும் அதற்குப் பிரித்தானிய அரசாங்கம் உதவி செய்வது அவர்களது தார்மீகப்பொறுப்பாகும் எனவும் வலியுறுத்தி நின்றனர்.

தேசிய இனம் என்றால் என்ன? ஒரு தேசிய இனம் பிரிவினை கேட்பதை எதிர்ப்பவன் கம்யூனிஸ்டே அல்ல; அவன் நயவஞ்சகன், முட்டாள் என்னும் கருத்துப்பட மாமேதை லெனின், ரோசா லக்ஸ் சம்பர்ருடன் நடத்திய உரையாடல்களை ஏனோ இவை எனக்கு ஞாபகமூட்டின; பெருந்திரளான மக்கள் கலந்துகொள்ளாத போதும் மண்டபம் நிறைய மக்கள் காணப்பட்டது கூட்ட அமைப்பாளரின் ஊக்கத்தையும், உழைப்பையும் எடுத்துக்காட்டிது. மிகக் குறுகிய காலத்துள், ஈழத் தமிழ்த்தலைவர்கள் அங்கு சட்டத்தை மீறியதற்காக கைதுசெய்யப்பட்டதை அறிந்து பின்பு ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டமே இது என்பதால் ஒருவகையில் இது ஈழத்தமிழர் கழகத்துக்கு (E. T. A.) ஒரு வெற்றியே.

முன்னர் நடைபெற்ற கூட்டங்களில் இல்லாத புது உணர்ச்சி ஒன்று இங்கு காணப்பட்டதைப் பலரும் கவனிக்கத் தவறவில்லை. இனம் இரத்த நிறப்பின்னணியில் பொன்னிறத்தில் கதிரவன் தோற்றமளிக்க ஏற்றப்பட்டிருந்த உதயசூரியன் கொடியையும், அழகான சேலையணிந்து கணீரென்ற குரலில் இளம் கன்னியரிருவர் "வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி" என்னுடன் தமிழ்க்கீதம் இசைத்தபோது மொழியறியாத வெள்ளைக்காரப்பேச்சாளர்களே உருகி நின்றதையும் அவதானிக்க முடிந்தது. தமிழ் வணக்கத்துடன் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிய டாக்டர் சுந்தரலிங்கம் அவர்கள் தனிநாடு கேட்கும் அளவிற்கு தமிழ் இனம் தள்ளப்பட்ட நிலைக்கான பல சட்டங்களையும் அழகாக ஆங்கிலத்தில் அலசி நின்றபோது அருகே அமர்ந்திருந்த வண. மைக்கல் ஸ்கொட் அவர்கள் அவற்றைக்குறிப்பாக எடுத்துக்கொண்டிருந்ததை தமிழ் மக்கள் பிரச்சினையில் அவர் கொண்டுள்ள அக்கறையைக் காட்டியது.

கூட்டத்தில் பிரதம பேச்சாளராக கலந்துகொண்டவர்களில் ஒருவரான லிபரல் கட்சியைச் சேர்ந்த றிச்சாரட் ஹேரன் ஈழத் தமிழர் பிரச்சினைக்கு தனது கட்சியின் சார்பில் ஆதரவு தெரிவித்து பேசியதுடன் தனது கட்சியின் கூட்டத்தில் இலங்கைத்தமிழர் பிரச்சினை குறித்து விவாதிக்கப்படும் எனக் கூறியபோது சபையில் கைதட்டலை வாங்கிக்கொண்டார்.

அவரின் பின்னர் உரையாற்றிய அனைத்துலக நிறுவனங்களில் ஒன்றான சிறுபான்மை உரிமைக் குழுவைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய மைக்கேல் ஸ்கொட், நீண்ட உரையாற்றினார். ஈழத் தமிழர் பலருக்கு, குறிப்பாக லண்டன் தமிழருக்கு பரிச்சியமான இவர், தாம் உண்மைக்கு பாடுபடுபவர் என்பதை தன் பேச்சில் ஆணித்தரமாக காட்டி நின்றார். இன ஒதுக்கல், இன ஆதிக்கம்பற்றிப் பேசிய அவர், இலங்கைத்தமிழர் பிரச்சினைக்கு சர்வதேச ரீதியில் ஆதரவுதேடவுள்ளதாக குறிப்பிட்டார். ஈழத் தமிழர் பிரச்சினையென்பது இளம் தமிழ் சந்ததியின் பிரச்சினையாதலால் இளம் தலைமுறையினர் மிக விழிப்பாக இருந்து செயல்படவேண்டும் எனக்கூறிய போது சபையில் இருந்தோர் கைதட்டி வரவேற்றனர். சிறுபான்மை இனங்களின் பிரச்சினைகளை நன்குணர்ந்தவர்களில் திரு. ஸ்கொட் அவர்களும் ஒருவர் என்பதை அவரது பேச்சு தெளிவாகக் கூறியது.

ஈழ விடுதலைப் போராட்டத்திற்காக லண்டனில் நீண்ட காலமாக இயங்கி வருகின்ற திரு: மகாலிங்கம் அவர்கள் பேசியபோது, ஈழத் தமிழர் கழகம் ஈழத்தின் விடுதலைக்கு பாடுபடும் தமிழர்கள் அனைவருக்கும் ஒரு களமாக விளங்குகிறது; ஈழ விடுதலை பற்றிய சகல கருத்துக்களும் ஒன்று சேர்ந்து இணைந்த ஒரு நோக்குடன் இயங்குவதற்கு இந்த ஈழத் தமிழர் கழகம் பயன்படும்; இந்த நிறுவனத்தில் தமிழர்கள் சேர்ந்து தத்தம் கடமைகளை நிறைவேற்றிச் செல்லவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கூட்டத்தில் பேசிய திருவாளர்கள் சிவலிங்கம், செல்வகுமார், வீரசிங்கம் ஆகியோரும் டாக்டர் சிறீனிவாசனும் உரைகளை வழங்கிச் சென்றனர்;

இவ்வளவு குறுகிய காலத்திற்குள் இத்தகைய கூட்டம் ஒன்றை E. T. A. நிறுவனத்தார் கூட்டியிருந்தனர் என்னும்போது மகிழ்ச்சியேற்பட்டபோதும், 20,000க்கு மேற்பட்ட தமிழர்கள் வாழும் லண்டனிலே இன்னும் வேகம் காணாது என்னும் கருத்து பரவலாகக் காணப்பட்டதை அவதானிக்க முடிந்தது."

---

## கொழுத்த சம்..

—1-ம் பக்கத் தொடர்

கள் டி. பி. முருகையா, திரு. கு. விநோதன் ஆகியோரேயென்றும், திரு. டி. பி. முருகையா, தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கத்திலிருந்து பெறும் ஊதியத்திலிருந்து 10 சத விகிதத்தை அரசாங்கத்தின் திரட்டு நிதிக்கு கொடுக்கிறாரென்றும் அமைச்சர் பதிலளித்திருக்கிறார்.

இவர்களில் செல்வக் குடும்பத்தில் பிறந்த திரு. விநோதன் ஓர் சட்டத்தரணியென்பதும், முருகையா ஆசிரியராக இருந்து மாதாந்தம் சம்பளம் பெறுபவர் என்பதும்தெரிந்ததே.

ஆனும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியில் ஏன் இவர்கள் ஒட்டிக்கொண்டிருக்கின்றனர் என்பது இப்போது வெட்ட வெளிச்[illegible]தல்லவா?

---

● ஒரு தாயின் உருக்கமான கடிதம்!

# கைதுசெய்யப்பட்ட தமிழ்த் தங்கையர் நிலை!

ஆசிரியர்,

"சுதந்திரன்"

அன்புடையீர்,

யாழ். கோட்டை "குவீன்ஸ் ஹவுஸ்" இல் சி. ஐ. டி. பொலிசாரினால் புஷ்பராணி மீது நடாத்தப்பட்ட மிருகத்தனமான தாக்குதலை கண்டித்து 'சுதந்திரன்' இல் தாங்கள் இதுவரை வெளியிட்ட செய்திகளுக்கும் கண்டனங்களுக்கும் தமிழினத்தின் சார்பில் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் மேற்படி சம்பவம் பற்றி தங்களுக்கு கடித மூலம் அறிவித்தபோது கைதுசெய்யப்பட்ட பெண்களில் ஒருவரான எனது மகள் கல்யாணி (மங்கையர்க்கரசி வேதநாயகம்) என்பவரும் தாக்கப்பட்டார் என்பதை நான் அறியவில்லை. ஆனால் அதன் பின்னர்தான் அறிந்தேன் எனது மகளும் குறைந்தது 8 தடவைகள் மிகவும் மோசமாகத் தாக்கப்பட்டாளென்று ஓரிரு சந்தர்ப்பங்களில் புஷ்பராணியும் எனது மகளும் கூட்டாகத் தாக்கப்பட்டார்களாம். இருவருக்கும் உடம்பில் பல இடங்களில் இரத்தக் காயங்களேற்பட்டு அவை இப்பொழுது புண்களாக மாறியுள்ளனவாம்; புண்கள் ஆறுவதற்கு மருந்தும் கொடுக்கிறார்களாம். ஆனால் இருவரும் மருந்தைப் போடாமலே இருந்துவருகிறார்களாம். இதுவரை ஒரு பெண் டாக்டரைக்கூட இவர்களைப் பார்க்க சி. ஐ. டி. யினர் அனுமதியாமலிருப்பதற்கு முக்கிய காரணம் இதுவென்றே நான் கருதுகிறேன்.

எனது மகள் கைதுசெய்யப்பட்டபின் (10-6-76) இதுவரை 3 தடவைகள் அவளைப் பார்க்கும் சந்தர்ப்பம் எமக்கு ஏற்பட்டது. முதலில் எனது கணவர் சாப்பாடு கொடுக்கச் சென்றபோது அவளைப் பார்க்க நேர்ந்தும் கதைக்க முடியாமல் (அனுமதிக்கப்படாமல்) திரும்பினார். அடுத்து என்னிடம் வாக்குமூலம் எடுப்பதற்கென்று சி. ஐ. டி. யினர் அழைத்து நானும் எனது கணவரும் "குவீன்ஸ் ஹவுஸ்"க்குச் சென்றபோது எமது மகளை எம் முன்னிலையில் அழைத்துவந்து கதைக்க அனுமதித்தார்கள் (சுமார் 10 நிமிடங்கள்வரை) எம்மைக் கண்டவுடன் எமது மகள் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மி விம்மி அழுதாள்; ஒரு பொலிஸ் இன்ஸ்பெக்டர், இரு உதவி இன்ஸ்பெக்டர்கள் உட்பட சுற்றிவர சி. ஐ. டி. யினரும் பொலிசாரும் சூழ்ந்திருந்த நிலையில் எமது மகளிடம் நாம் எதுவும் அந்தரங்கமாகக் கதைக்கமுடியாமல் போய்விட்டது. ஆனால் அவள் அழுததிலிருந்து ஏதோ தனக்கு நடந்த பல கொடுமைகளைச் சொல்ல நினைத்தும் சொல்ல முடியாத நிலையில் தவிக்கிறாள் என்றே எம்மால் சந்தேகிக்க முடிந்தது.

கடைசியாக இரு தினங்களுக்குமுன் எமது மற்ற 6 மகளையும் கல்யாணியைச் சந்திப்பதற்கு அனுமதித்தார்கள். அப்பொழுதும் பொலிசாரின் முன்னிலையிலேயே கதைக்க அனுமதிக்கப்பட்டாள். அப்பொழுது கல்யாணியின் கைகளில் சில தழும்புகள் இருப்பதை அவளின் உடன்பிறப்புக்கள் அவதானித்துவந்து எமக்குச் சொன்னார்கள்; இந்தத் தழும்புகள், புண்கள் எல்லாம் முற்றாகக் குணமாகும் வரை இவர்களை நீதிமன்றத்துக்குக் கொண்டுவராமலும், யாரையும் தனிமையில் கதைக்க அனுமதியாமலும் டாக்டரின் பரிசோதனைக்குட்படுத்தாமலும் பொலிசார் வேண்டுமென்றே தடை போட்டுள்ளனர் என்றே நாம் கருதவேண்டியிருக்கிறது.

தங்கள் உண்மையுள்ள

—திருமதி. யோ. வேதநாயகம்

உதவிச் செயலாளர்

த. மகளிர் பேரவை

---

## தமிழினம்....!

—6-ம் பக்கத் தொடர்

திற்கு ஆளாகியுள்ள நாம் இனிமேலும் காலம் தாழ்த்துவது நேர்மையின் அடிப்படையில் அமைந்த செயலாக விளங்கமுடியாது. காலம் தானாக மாறப்போவதில்லை காலத்தை மாற்றியமைப்பது எமது கடமையாகும்,

எம் தூய்மையிலும் எம் துணிவிலும் நம்பிக்கை வைத்து நாம் செயற்படின் இறைவன் துணை நிற்பது உறுதி. எமக்கு நாம் துணையாக விளங்காத நிலையில் எமக்கு இறைவன் துணை நிற்பான் என்று எண்ணுவது தவறு. எனவே கோணேசன் குடிகொண்டிருக்கும் கோணமாமலையிலே நாம் எடுக்கும் முடிவுகள் எம்மினத்தினை வாழ்விக்கும் முடிவுகளாக அமைய உறுதி பூணுவோமாக;

வரலாற்றுபெருமை மிக்க திருகோணமலையில் தீட்டப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானங்கள் வரலாற்றுப் புகழ் வாய்ந்த தமிழ் இனத்திற்கு புதிய வரலாறு படைப்பது உறுதி. வரலாற்று உணர்வு மிக்க மாணவன் என்ற முறையில் என் தீர்ப்பு தீர்க்க தரிசனம் வாய்ந்ததாய் விளங்கும் என்பது எனது திடமான நம்பிக்கையாகும். தீந்தமிழர் கூட்டமே திரண்டு வருக திருமலை நோக்கி! நாம் திட்டும் திட்டங்கள் எம் இனத்தின் வாட்டத்தைப்போக்குவது உறுதி! தங்கத் தமிழ் ஈழம் தமிழனுக்கே! இது முடிந்த முடிவு, உலகமே முடி சாய்த்து ஏற்கும் முடிவும் இதுவேயாகும்.

---

## தமிழில் இல்லை!

திட்டமிடல் பொருளாதார அமைச்சின் பிராந்திய அபிவிருத்திப் பிரிவினர் தமது அபிவிருத்தித் திட்டங்களை விளங்குவதற்கு 'நியூஸ்' என்ற ஓர் துண்டு வெளியீட்டை சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே வெளியிடுகின்றனர். இந்த வெளியீடு தமிழில் வெளியிடப்படுவதில்லை!

---

## உதயசூரியன்...

—1-ம் பக்கத் தொடர்

யாலோசனைக்கூட்டத்தில் 139 உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள்.

9ம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும் கலை நிகழ்ச்சிகளுக்கு இரவு 11 மணிவரைக்கும், 10ம் திகதி நடைபெறும்பொதுக் கூட்டத்துக்கு இரவு 9.30 வரைக்கும் ஒலிபெருக்கி பாவிப்ப[illegible] வழங்கியுள்ளனர்.

வவுனியாவில் உங்கள் தவழும் மழலையின் புன்னகை பூர்த்த முகத்தை அழகிய நிழற்படத்தில் கண்டு மகிழ்ந்திட உங்கள் திருமண விஷேச வைபவங்கள், வெளிப்புற படப்பிடிப்பு வேலைகளையும் சிறப்புடன் செய்துகொள்ள விசயம்செய்யுங்கள்.

**கவிதாஸ்**

வெளிப்புற படப்பிடிப்பாளர்கள்
5 B. பஸ் நிலையம்
வவுனியா

**மில்க்வைற் செய்தி இதழ் . 7**

5 மில்க்வைற் நீம் சோப் அல்லது 2 பார் சோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மில்க்வைற் சலவைப் பவுடர் அல்லது 2 மெடிக்கேட்டற் சோப் மேலுறைகளை அனுப்பி மில்க்வைற் செய்தி இதழ் 7ஐப் பெற்றுக் கொள்ளுங்கள்.

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம், யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினம் தன்னைத்தானே ஆள்வதற்கு வழிகாட்டவிருக்கிறது திருகோணமலை மாநாடு!

ஈழம்வாழ் தமிழினம் இன்று மிகமிக நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறது. ஈழத் தமிழினத்தின் வரலாற்றினை நாம் உன்னிப்பாக ஆராயின் இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தை எம்மினம் என்றும் எதிர்நோக்கவில்லை என்பதனை வரலாற்று மாணவன் என்ற முறையில் நான் அறுதியிட்டு உறுதியுடன் கூற முடியும்.

ஈழத் தமிழினத்தின் வரலாற்றில் வெவ்வேறு காலப் பிரிவுகளில் வெவ்வேறு நாட்டு அரசுகளால் நாம் தாக்குண்டதுண்டு. நாம் அடிமைப்படுத்தப்பட்டு ஆளப்பட்டதுமுண்டு. ஆனால், 1948இல் சிங்கள அரசிற்கும், சிங்கள இனத்திற்கும் ஆட்சிப் பொறுப்பு மாறியதை அடுத்தே தமிழினம் பூண்டோடு அழியும் பெரும் பேராபத்து உருவாகியுள்ளது. இத்தகைய அழிவிற்கு சிங்கள இனத்தின் வெறிப்போக்கு மட்டுமல்ல, தமிழினத்தை வழிநடத்திய தலைமைப்பீடம் தொடர்ச்சியாக விட்ட தவறுகளும், தொலைநோக்கற்ற தன்மையும் காரணங்களாயமைந்துள்ளன. எனினும் இவையொட்டிய விரிவினை இங்கு ஆராய்வது எனது நோக்கமல்ல. காலப்போக்கில் தேவையொட்டி எம்மை நாமே பரிசோதிக்கும் முறையில் அவை ஆராயப்படும்.

### தமிழ் ஈழம் எங்கள் உயிர்

தமிழன் பேசுகின்ற மொழி, கொண்டொழுகும் பண்பாடு, கடைப்பிடிக்கும் நாகரிகம், வாழ்கின்ற தாயகம் ஏற்றுக்கொண்டுள்ள வாழ்க்கைமுறை, ஆகிய இவை அனைத்தையும் முற்றாக அழித்து ஈழத்தில் தமிழினம் வாழ்ந்ததென்பதனைப் பொய்யாய் பழங்கதையாய் ஆக்கும் சதி முயற்சியில் ஆண்ட சிங்கள அரசுகளும், ஆள்கின்ற சிங்கள அரசும் முயல்கின்றன. எம் முன்னாலேயே எம்மினத்தை அழிக்க சிங்கள அரசு குழி தோண்டியுள்ளதை இனியும் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. பொறுத்தது போதும் இனிப் பொங்கியெழத்தான் வேண்டும் எனும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள தமிழினம் கட்சி கடந்த நிலையில், மதம் கடந்த நிலையில், மாகாணம் கடந்த நிலையில் தமிழீழம் எங்கள் உயிர்மூச்சு என்ற குரலை ஒருங்கிணைந்த நிலையில் உரத்த குரலில் உலகெங்கும் கேட்கும் முறையில் ஒலிக்கத்தொடங்கியுள்ளது. பல எதிர்ப்புக்களுக்கிடையில் விட்டுக்கொடுக்காது நடத்தப்பட்ட வட்டுக்கோட்டை மாநாடு இதனை உலகெங்கும் எதிரொலிக்கச் செய்துள்ளது. அந்தக் கொள்கைப் பிரகடனத்தின் தொடர்ச்சியாகவே எதிர்வரும் யூலை 9ம், 10ம் நாட்களில் திருமலையில் நடைபெறும் மாநாடு விளங்குகிறது. வட்டுக்கோட்டை மாநாடு கொள்கை விளக்க மாநாடாக, கொள்கைப் பிரகடன மாநாடாக விளங்குகையில் போராட்டத்திட்டங்களை தமிழ் மக்களுக்கும், அவர்களூடாக உலகுக்கும் அறிவிக்கும் போர்க்கோலம் பூணும் மாநாடாக திருமலை மாநாடு அமைகின்றது.

### இரு மாதங்களுக்கிடையில் இரு தேசிய மாநாடு

உலகின் எந்த விடுதலை இயக்கத்தின் வரலாற்றிலும் இரண்டு தேசிய மாநாடுகளை இரண்டு மாத கால இடைவெளிக்கிடையிலேயே நடாத்தியதற்குச் சான்றில்லை. ஆனால் தமிழர் கூட்டணியாய் விளங்கி வட்டுக்கோட்டை மாநாட்டில் தமிழர் விடுதலைக் கூட்டணியாக மலர்ந்துள்ள இவ்வியக்கம் மேற்குறித்த அரிய செயலை நிலைநாட்டித் தனக்குத் தனிப்புகழை ஈட்டியுள்ளது. எம்மினத்தை விரைந்து அழிக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதினால், எம்மினத்தை விரைந்து காக்க வேண்டிய நிலைக்கு தமிழர் விடுதலை இயக்கம் தள்ளப்பட்டிருப்பதுடன் விரைந்த நிலையில் இவ்விரு மாநாடுகளையும் கூட்டவேண்டிய நிலைக்கும் நாம் ஆளாக்கப்பட்டுவிட்டோம். தமிழர் தளபதி அமிர்தலிங்கம் அவர்களின் தொகுதியில் தமிழினத்தை வாழ்விக்கும் கொள்கைப் பிரகடனம் செய்துள்ள நாம் தமிழீழத்தின் தலைநகரம் திருகோணமலையிலே போர்க்கோலம்பூண்டு உலகையே அதிர்ச்சியில் ஆழ்த்த உறுதிகொண்டுள்ளோம்.

### நிலைத்த வாழ்வு நிலத்தின் வாழ்விலேயே உண்டு

மொழி ஓர் இனத்தின் உயிர் என்பதனை ஏற்கும் நாம் அதே வேளையில் அந்த உயிர் வாழ்கின்ற உடலாகவே அம்மொழி பேசுகின்ற இனம் வாழ்கின்ற நிலப்பரப்பு விளங்குகின்றதென்பதனை நாம் கனவிலும் மறக்க முடியாது. ஆகவேதான் திருகோணமலையில் நாம் தீட்டும் போராட்டத் திட்டங்களில் தமிழினத்தின் தாயகத்தை மேலும் பறிபோகாது மீட்கும்போராட்டமே தலையாய போராட்டமாக அமையவேண்டும் என்பதனை நாம் இங்கு வலியுறுத்துகிறோம். நாம் இழந்துவரும் மொழி உரிமையை எம் வழித்தோன்றல்கள்போரிட்டுக் காக்கமுடியும். ஆனால் எம் மரபு வழிவந்த தாயகத்தை நாம் இழப்போமாயின் மீட்கமுடியாத பேராபத்துக்கு ஆளாகநேரிடும். ஒரு இனத்தின் நிலைத்த வாழ்வு அவ்வினத்தின் நிலைத்த வரையறை செய்யப்பட்ட நிலப்பரப்பிலேயே தங்கியிருக்கின்றது. இந்த அடிப்படை உண்மையை—உலகவரலாறுகள் உணர்த்தி நிற்கும் இக்கருத்தினை—தமிழினத்தின் தலைமைப்பீடம் உணர்ந்து செயற்படவேண்டும். தமிழினமும் பக்கதுணையாகப் பணியாற்ற உறுதி பூணவேண்டும்.

### அங்குலமும் அயல் வெறியர் ஆளவிடமாட்டோம்

இந்த நிலையை நாம் உருவாக்கினாற்றான், நாம் காண இருக்கின்ற தமிழ் ஈழம் வெறும் பகற்கனவாக மாறாது எம்மை வாழ்விக்கும் கனவாக — நனவாக மலரமுடியும். எனவேதான் தோன்ற இருக்கும் தமிழ் ஈழத்தில் அரசவைக் கவிஞராய் வீற்றிருக்கப்போகும் கவிஞர் காசிஆனந்தன் பின்வரும் முறையில் உணர்ச்சி பொங்க, உள்ளம் துடிக்கப் பாடுகின்றார்.

"எங்கள் அருந்தமிழ் மண்ணில்
இராவணனார் பொன் மண்ணில்
அங்குலமும் இனி நாங்கள்
அயல் வெறியர் ஆளவிடோம்
கங்குல் விலகின காண்...
எங்கள் தமிழ் மேலாணை
தங்கத் தமிழ் ஈழம்
தமிழனுக்கே தமிழனுக்கே"

### ஸ்ராலின் சாற்றிய உண்மை

கவிஞர் காசிஆனந்தனின் மேற்குறித்த கருத்தினை ஏற்க மறுக்கும் கொம்யூனிஸ்ட் குஞ்சுகள் எம்மிடையே வாழின் அவர்களுக்கு அவர்களின் கொம்யூனிஸ்ட் தலைவன் ஸ்ராலின் கூறிய பின்வரும் கருத்தினை நினைவுபடுத்த விரும்புகிறோம். "ஒரு இனத்தின் எல்லைப்பரப்பை பாதுகாக்கமுடியாத நிலையில் தோற்றுவிக்கப்படும் சுயாட்சியமைப்பு எவ்வித பயனையும் தராது" (Autonomy irrespective of territory serves no purpose) இதனைப் படித்தபின்பு ஆகுதல் குழம்பிய மூளை படைத்த இக் குஞ்சுகளுக்கு தெளிவு ஏற்படும் என நம்புவோமாக.

### முடிவுக்கு வந்த காரணம்

சுருங்கக்கூறின் டொனமூர் காலம்தொட்டு சோல்பரி அரசியல் அமைப்பு ஊடாக கொல்வின் உருவாக்கிய சட்டங்கள்வரை, நாட்டிலுருவாகிய சட்டங்கள் அனைத்தும் தமிழினத்தின் தனித்துவத்தை அழித்துப் புதைகுழியில் தள்ளும் சட்டங்களாக உருவாகியுள்ளதை நாம் உணரவேண்டும். எனவேதான் "டொனமூர் எனின் தமிழர் இனிமேல் இல்லை" (Donoughmore means Tamils no more) என்ற குரல் எழுப்பிய தமிழ் இனம் சோல்பெரி தமிழ் இனத்தின் ஆன்மாவைப் புதைக்க வந்தவர். (Soulbury has come to bury the soul of the Tamils) என்று குரல் கொடுத்த தமிழினம் இன்று கொல்வின் சட்டம் தமிழினத்தைக் கொல்லும் சட்டம் எனக் கொதித்தெழுந்துள்ளது.

ஆகவேதான் எம்மினத்தின் அரசியல் பசிக்கு (Political hunger) தீர்வு காணாத எந்தச் சட்டத்திற்கும் நாம் அடிபணிய முடியாது என்ற முடிவிற்கு வந்துள்ள தமிழினம் எம்மினத்தின் அடிமை விலங்கை அறுத்தெறிய முயற்சிகள் பல செய்து முடிவுகள் பல எடுத்து பின் இச் சட்டத்துக்கு எதிராக கிளர்ந்தெழுவதே எமக்குள்ள ஒரேவழியென்ற மாற்றமுடியாத முடிவிற்கு வந்து நாட்டின் சட்டத்தை மீறும் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளோம். திருமலையில் தீட்டப்படும் போராட்டத்திட்டங்கள் அநியாயத்தையும், அட்டூழியத்தையும் எதிர்த்து தமிழன் தன்னை ஆள உறுதி பூண்டுள்ளான் என்பதனை உலகுக்கு அறிவிக்கும் திட்டங்களாக அமையப்போகின்றன. இதன் விளைவுகள் மிகமிகப் பாரதூரமானவை என்பதனை நாமுணர்கிறோம். ஆனால் ஒரு இனத்தின் வாழ்வோடு ஒப்பிடுகின்றபோது நாம் எடுக்கும் முடிவுகள் அதனால் ஏற்படும் விளைவுகள் எமக்கு மிகச் சிறியவையாகவே தோன்றுகின்றன. இன்று எம்மினத்தைக் காக்காத நிலையில் இனிமேல் காப்போம் என்று கூறுவது பிறரை ஏமாற்றுவது ஒருபுறமிருக்க எம்மை நாமே ஏமாற்றும் முயற்சியாகவே கருதப்படும். ஏற்கெனவே காலந்தாழ்த்தியுள்ளோம் என்ற குற்றத்

—5-ம் பக்கம் பார்க்க

## காலம்மாறும் என்று காத்திராது காலத்தை நாமே மாற்றுவோம்!

### ஈழவேந்தன்

(த. வி. கூ. கொழும்புக் கிளை)

## வெஞ்சிறையில் விடுதலை வீரர் அமரசிங்கம் நான்கு ஆண்டுகள் பூர்த்தி

சிறைக்கதவு திறந்தது. வெங்கொடுமைச் சிறையில் நீண்டகாலமாக தமிழின விடுதலைக்காய் தவங்கிடக்கும் இளைஞர் நா. அமரசிங்கம் சிறையுள்ளே பார்வையாளர் உரையாடும் அறையில் இருந்த வண்ணம் சிறைவாசலை நோக்குகிறார். சிரித்த முகத்தோடு, வருபவர் யாராயிருக்கும் என்ற சிந்தனையில் ஆழ்ந்திருந்த அவர் பார்வை நீள காற்சட்டை அணிந்து சிறைவாசலைக் கடந்து தன்னைப் பார்க்கவரும் இளைஞரில் நிலைத்து நிற்கிறது.

வந்தவர் இவரை நெருங்கிவிட்டார். முன்புதான் பார்த்திராத உருவத்தை உடையவராக வந்த இளைஞர் அமரசிங்கத்துக்கு காட்சி—தருகிறார். 'வேறு யாரேனும் சிறைக் கைதியைப் பார்க்க இந்த இளைஞர் வருகிறார் போலும்' என்று சிறையில் வாடும் இவர் நினைத்துக்கொள்கிறார், ஆனால்......

வந்த இளைஞர் வேறு யாருமல்ல. நமது அமரசிங்கத்தின் தம்பியேதான் நான்கு வருடங்களுக்குப் பின்தோற்றம் மாறிய நிலையில் தன் முன்னே காட்சியளித்த தன் உடன் பிறப்பையே அடையாளம் காணமுடியாமல் தடுமாறினான் மறத்தமிழன் அமரசிங்கம். நீண்ட நாட்களுக்குப்பின் அண்ணனும் தம்பியும் உரையாடினார்கள், கொஞ்ச நேரம்தான். இருவரும் பிரியவேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

அமரசிங்கம் சிறையின் பலத்த காவலிடப்பட்ட பகுதியில் அடைக்கப் படுவதற்காக சிறைக்காவலர்களால் அழைத்துச்செல்லப்படுகிறார். சிறைக்கதவு திரும்பவும் திறக்கிறது. தம்பியும் தனது மனக்கதவு திறக்கவிடுதலை வீரனாகிய தனது அண்ணனின் நினைவுகளோடு வெளியே செல்கிறார்.

நெஞ்சை உருக்கும் இந்நிகழ்ச்சி அண்மையில் கண்டி போகம்பரைச் சிறைச்சாலையில் நடந்தது. ஆகக் கூடிய காலம் நீதி விசாரணை எதுவுமின்றி சிறைத்துன்பத்தை இன்முகத்துடன் அனுபவித்துக்கொண்டிருக்கும் அமரசிங்கம் அவர்களுக்கு 12-7-76 அன்றுடன் வெஞ்சிறை வாழ்வு நான்கு வருடங்கள் நிறைவு பெறுகிறது.

இவர் தமிழர் நெஞ்சங்களிலும், தமிழீழ விடுதலை வரலாற்றிலும் நிலையான இடத்தைப்பெறுவது திண்ணம். இவரைப்போலவே [illegible] திசைவீர சிங்கம், சத்தியசீலன் ஆகியோர் மூன்றரை [illegible] இரண்டு வருடங்களாகவும் எதுவித விசாரணையுமின்று சிறையில் இருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குற்றப்பத்திரிகையும் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணமும்!

—2-ம் பக்கத் தொடர்

பின்கீழ் நீக்கப்பட்டபடியாலும்,—

ஐக்கிய இலங்கைச் சமஷ்டிக் குடியரசின் ஓர் அங்கமாக ஓர் சுயாட்சித் தமிழ் அரசை நிறுவுவதன் மூலம் தமிழ் மக்களின் தனித்துவத்தைக் காக்கும் அதே வேளையில் நாட்டின் ஒற்றுமையைப் பேணும் பொருட்டு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி அரசியல் நிர்ணய சபைக்குச் சமர்ப்பித்த திட்டங்கள் அவற்றின் தகுதி ஆராயப்படாமலே முழுதாக நிராகரிக்கப்பட்டபடியாலும்,—

வல்வெட்டித்துறையில் 1971 பெப்பிரவரி 7ந் திகதி கூடிய அனைத்துத் தமிழ் அரசியற் கட்சிகளின் மகாநாட்டில் எடுக்கப்பட்ட ஏகோபித்த ஒன்பது அம்ச முடிவுகளின்படி அரசியல் நிர்ணய சபையின் அடிப்படைத் தீர்மானங்களுக்குக் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும், அரசியல் கட்சிகளாலும் இன்று ஆளுங்கட்சியில் இருப்போர் உட்பட்ட பாராளுமன்ற உறுப்பினராலும் கொண்டுவரப்பட்ட திருத்தங்களும் அரசாங்கத்தினாலும் அரசியல் நிர்ணய சபையாலும் முற்றாக நிராகரிக்கப்பட்டபடியாலும்,

1966ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தமிழ்மொழி விசேட ஏற்பாடுகள் சட்ட விதிகளையாவது அரசியல் அமைப்பில் இடம்பெறச் செய்யும் பொருட்டும், மொழி உரிமை, மத உரிமை, அடிப்படை உரிமைகள் பற்றியும் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அமைப்புச் சட்ட மூலத்திற்கான திருத்தங்கள் எல்லாமே தோற்கடிக்கப்பட்ட காரணத்தினால் மிகப் பெரும்பாலான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரசியல் நிர்ணய சபையைப் பகிஷ்கரித்தபடியாலும்,

1972ம் ஆண்டு மே 22ந் திகதி அங்கீகாரம் பெற்ற குடியரசு அரசியல் அமைப்பை நிராகரித்த தமிழர் விடுதலைக் கூட்டணி, 1972 யூன் 25ந் திகதி பிரதமருக்கும் அரசாங்கத்திற்கும் ஆறு அம்சக் கோரிக்கையைச் சமர்ப்பித்து அவற்றின் அடிப்படையில் அரசியல் அமைப்பைத் திருத்தித் தமிழ் தேசிய இனத்தின் அபிலாஷைகளை பூர்த்தி செய்ய ஏற்ற நடவடிக்கை எடுப்பதற்கு மூன்று மாத அவகாசம் அளித்து, அரசு அவ்வித நடவடிக்கை எடுக்கத் தவறினால் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரத்தையும் உரிமைகளையும் வென்றெடுக்கத் தமிழர் கூட்டணி அரசுக்கு எதிராக சாத்வீக நேரடி நடவடிக்கையில் இறங்குமென அரசாங்கத்திற்கு அறிவித்தபடியாலும்,

நாட்டின் ஒற்றுமைக்கு பாதிப்பற்ற முறையில் தமிழ் தேசிய இனத்தின் உரிமைகளுக்கு அரசியல் சட்டரீதியான அங்கீகாரம் பெறுவதற்கு தமிழர் கூட்டணியின் இந்த இறுதி முயற்சியைப் பிரதம மந்திரியும் அரசாங்கமும் உதாசீனம் செய்து உதறித் தள்ளியபடியாலும்,

தமது அரசியல் அமைப்புக்குத் தமிழ் மக்களின் ஆதரவுண்டு என்ற அரசின் கூற்றை நிலைநாட்டுவதற்குத், தேசிய அரசுப் பேரவையில் தமது ஸ்தானத்தைத் துறந்து ஓர் இடைத்தேர்தலை ஏற்படுத்துவதற்குத் தமிழர் கூட்டணித் தலைவர் அளித்த சந்தர்ப்பத்தை வேண்டுமென்றே இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஒத்திவைத்துக் காங்கேசந்துறைத் தொகுதித் தமிழ் வாக்காளரின் ஜனநாயக உரிமையைப் புறக்கணித்தபடியாலும்,

1975 பெப்பிரவரி 6ந் திகதி நடைபெற்ற இடைத்தேர்தலில் காங்கேசந்துறை வாக்காளர் அதிக பெரும்பான்மை வாக்குகளால் சிங்கள அரசாங்கத்தினால் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்ட குடியரசு அரசியல் அமைப்பை நிராகரித்தது மாத்திரமன்றி திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் அவர்கட்கும் அவர் மூலம் தமிழர் கூட்டணிக்கும் சுதந்திர, இறைமையுள்ள, மதச் சார்பற்ற, சோஷலிச தமிழ்ஈழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்யக் கட்டளையிட்டபடியாலும்,

1976ம் ஆண்டு மே 14ம் திகதி பண்ணாகத்தில் கூடிய தமிழர் விடுதலைக் கூட்டணியின் முதலாவது மாநில மாநாடு—

அ. தமது உன்னதமான தாய்மொழியாலும், தம் மதங்களினாலும், தமது சிறப்புப் பெற்ற கலாச்சார பாரம்பரியங்களாலும், ஐரோப்பிய படையெடுப்பாளரின் ஆயுதபலத்தினால் வெற்றிகொள்ளப்படும் வரை பல நூற்றாண்டுகளாக ஓர் பிரத்தியேகமான பிரதேசத்தில் தனி அரசாகச் சுதந்திர வாழ்வு நடத்திய வரலாற்றாலும், தமது பிரதேசத்தில் ஓர் தனி இனமாக வாழ்ந்து தம்மைத் தாமே ஆளும் உள்ள உறுதியாலும், இலங்கை வாழ் தமிழ் மக்கள் சிங்களவரிலிருந்து வேறுபட்ட ஓர் தனித் தேசிய இனமென்று இத்தால் பிரகடனப்படுத்துகின்றது.

ஆ: 1972ம் ஆண்டு குடியரசு அரசியலமைப்புமூலம் தமிழ் மக்களை புதிய ஏகாதிபத்திய எஜமானர்களான சிங்கள மக்களால் ஆளப்படும் அடிமைத் தேசிய இனமாக மாற்றி, தாம் தவறாக அபகரித்துக்கொண்ட அதிகாரத்தால் தமிழ்தேசிய இனத்தின் தனிப்பிரதேசம், மொழி, குடியுரிமை, பொருளாதார வாழ்வு, வேலை வாய்ப்பு ஆகியவற்றைப் பறித்துத் தமிழ் மக்கள் ஓர் தேசிய இனமென்று கூறுவதற்கான தகுதிகள் அத்தனையையும் அழிக்கின்றார்கள் என்றும் இம்மாநாடு இத்தால் உலகுக்கு அறிவிக்கின்றது.

எனவே, தமிழீழம் என்ற தனியரசு அமைப்பதை ஒட்டி, வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கு வெளியே வாழ்ந்து தொழில் புரியும் பெரும்பான்மையான தோட்டத் தொழிலாளரை உறுப்பினராகக் கொண்ட தொழிற்சங்கம் என்ற முறையில், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்த மனத்தடைகளை கவனத்திற்கு எடுக்கும் அதே நேரத்தில், இந்நாட்டுத் தமிழ் தேசிய இனத்தின் நிலையான வாழ்வைப் பாதுகாப்பதற்கு ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் உரித்தான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் சுதந்திர இறைமையுள்ள மதச்சார்பற்ற, சோசலிச தமிழீழ அரசை மீள்வித்துப் புனரமைப்புச் செய்வது தவிர்க்க முடியாததாகிவிட்டது என்று இம்மாநாடு தீர்மானிக்கிறது.

இம்மாநாடு மேலும் கீழ்க் கண்டவாறு பிரகடனப் படுத்துகின்றது.

1. தமிழ் அரசு வடக்கு கிழக்கு மாகாணங்களைக் கொண்டதாக விருப்பதுடன் தமிழீழக் குடியுரிமையை நாடும் இலங்கையின் எப்பாகத்திலும் வசிக்கும் தமிழ்பேசும் மக்கள் எல்லோருக்கும், உலகின் எப்பாகத்திலும் வசிக்கும் ஈழ வம்சாவளியைக் கொண்ட தமிழ் மக்களுக்கும், பூரண சமத்துவ குடியுரிமைக்கு உத்தரவாதம் அளிக்கும்—

2. தமிழீழத்தின் அரசியலமைப்பு அவ்வரசின் எந்த மத, பிரதேச சமூகங்கள் மீது எப்பிரிவினரும் ஆதிக்கம் செலுத்தாமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனநாயக ரீதியில் அதிகாரம் பரவலாக்கப்பட்டதாக அமையும்—

3. தமிழீழ அரசில் சாதி அழிக்கப்பட்டு தீண்டாமை என்ற கொடிய முறையும் பிறப்பினால் உயர்வு, தாழ்வு கற்பிக்கும் நிலையும்வேரோடு களையப்பட்டு எந்த உருவத்திலும் அவற்றை அனுஷ்டிப்பது சட்டத்தின் மூலம் தண்டிக்கப்படும்.

4. தமிழீழம் மதச் சார்பற்ற அரசாக இருக்கும். அதே நேரத்தில் அங்கு வாழும் மக்கள் அனுஷ்டிக்கும் மதங்கள் எல்லாவற்றிற்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் அளிக்கும்.

5. தமிழீழத்தின் அரச மொழியாக தமிழ் இருக்கும். அதே நேரத்தில் சிங்கள அரசில் வாழக் கூடிய தமிழ் பேசும் சிறுபான்மையோருக்கு கிடைக்கும் உரிமைகளுக்கு சமதையாக தமிழீழத்தில் வாழக்கூடிய சிங்களம் பேசும் சிறுபான்மையோருக்கும் தமது மொழியில் கல்வி கற்கும், அரசுடன் கருமமாற்றும் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

6. ஒரு சோசலிச நாடாக இருக்கப்போகும் தமிழீழத்தில் மனிதனை மனிதன் சுரண்டி வாழும் நிலை விலக்கப்பட்டும், உழைப்பின் பெருமை உறுதிப்படுத்தப்பட்டும், சட்டத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகளுக்கு உட்பட்டு தனியார் துறை இயங்க அனுமதிக்கப்படும்: அதே நேரத்தில் உற்பத்தி சாதனங்களும் அவற்றின் விநியோக வழிகளும் அரசக் கட்டுப் பாட்டுக்கும் உடைமைக்கும் உட்படுத்தப்பட்டும் சோசலிச திட்டமிடுதலின் அடிப்படையில் பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டும், தனி மனிதனோ, தனி ஒரு குடும்பமோ சேர்த்து வைக்கமுடியாத செல்வத்திற்கு உச்ச வரம்பு விதிக்கப்பட்டும் இருக்கும்.

தமிழ் தேசிய இனத்தின் இறைமையையும், விடுதலையையும் வென்றெடுப்பதற்கு ஆன ஓர் செயல் திட்டத்தைத் தயாரித்து திருகோணமலையில் ஜூலை மாதத்தில் நடைபெறவிருக்கும் மாநாட்டில் சமர்ப்பிக்குமாறும் போராட்டத்தை விரைவில் ஆரம்பிக்குமாறும் இம்மாநாடு தமிழர் கூட்டணி நடவடிக்கைக் குழுவைப் பணிக்கின்றது;

மேலும் சுதந்திரத்திற்கான புனிதப் போரில் தம்மை முற்று முழுதாக அர்ப்பணிக்க முன்வருமாறும், இறைமையுள்ள, சோசலிச தமிழீழ அரசு என்ற இலக்கை அடையும் வரை தயங்காது உழைக்குமாறும் தமிழ் தேசிய இனத்திற்குப் பொதுவாகவும், தமிழ் இளைஞர்களுக்குச் சிறப்பாகவும் இம்மாநாடு அறைகூவல் விடுகின்றது.''

இதுவே நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணமாகும்.

# அரசியல் சுதந்திரமே அடிப்படை!

''நம்முடைய திடமான கொள்கை, — அசைக்கமுடியாத நம்பிக்கை இந்த விஷயத்தில் என்னவென்றால் :-

''ஒரு நாட்டுக்கும் அந்த நாட்டு மக்களுக்கும் அரசியல் சுதந்திரம் மற்ற எந்த நன்மையைக் காட்டிலும் மேலானது.

''வறுமையும் பஞ்சமும் நாட்டில் தாண்டவமாடினாலும் சுதந்திர ஆட்சி தான் மேலானது.

''அன்னியர்களின் ஆட்சியில் குபேர சீமானாயிருப்பதைவிடச் சுதந்திர ஆட்சியில் பரம தரித்திரனாக வாழ்வதே விரும்பத் தக்கது.

''அன்னிய ஆட்சியின் கீழ் தினம் நாலுவேளை வயிறார உண்பதைக் காட்டிலும், நம்முடைய சொந்த சுதந்திர ஆட்சியில், நாம் தேர்ந்தெடுத்த பிரதிநிதிகளின் ஆட்சியில் பஞ்சத்தினால் செத்துப்போவதே மேலானது.

''சுதந்திரத்துக்காக இந்த நாட்டிலுள்ள பள்ளிக் கூடங்களை யெல்லாம் மூடிவிட வேண்டும் என்று சொன்னால் அதற்கு நாம் தயாராயிருக்கவேண்டும்.

''சுதந்திரத்துக்காக இந்த நாட்டிலுள்ள வீடுகளையெல்லாம் இடித்துப் போடவேண்டும், மக்கள் அனைவரும் திறந்த வெளியிலோ, மலைக்குகையிலோ வசிக்கவேண்டும் என்றால் அதற்கும் தயாராயிருக்கவேண்டும்.

''வீட்டுக்கு ஒரு பிள்ளையை நாட்டுக்காகப் பலி கொடுக்க வேண்டுமென்றால் மக்கள் அவ்விதம் செய்யப்போட்டியிட்டுக்கொண்டு முன்வரவேண்டும்.

''இப்படியெல்லாம் சுதந்திரத்துக்காகத் தியாகம் செய்யத்தயாராயிருக்கும் மக்கள்தான் சுதந்திரத்திற்கு லாயக்கானவர்கள், அவர்கள்தான் சுதந்திரமாய் வாழமுடியும். இவ்விதமெல்லாம் தியாகம் செய்யத் தயாராயிருந்ததினாலேயே தான், இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா, ருஷியா, சீனா முதலிய நாடுகள் இன்று சுதந்திர தேசங்களாயிருக்கின்றன. இல்லாவிடில் அந்த நாடுகள் எல்லாம் இந்த நேரத்தில் ஜெர்மனிக்கும், ஜப்பானுக்கும் அடிமை பூண்டு வாழவேண்டி நேர்ந்திருக்கும்.

''சுதந்திரம்'' என்று செல்லும்போது ஒரு நாட்டின் அரசியல் சுதந்திரத்தைத்தான் நாம் முதன்மையாகக் குறிப்பிடுகிறோம்.

''அரசியல் சுதந்திரந்தான் மிக முக்கியமானது. மற்றப் பொருளாதார சுதந்திரம், வியாபார சுதந்திரம், தொழில் சுதந்திரம், படிக்கும் சுதந்திரம், படியாமலிருக்கும் சுதந்திரம், அம்மை குத்திக்கொள்ளுகிற சுதந்திரம், குத்திக்கொள்ளாமலிருக்கும் சுதந்திரம், கண்டதைப் பேசி எழுதும் சுதந்திரம்— இவையெல்லாம் இரண்டாம் பட்சமானவைதான். இந்தச்சுதந்திரங்கள் எல்லாம் இல்லை என்பதற்காக அரசியல் சுதந்திரத்தைப் பற்றி அலட்சியமாகப் பேசுவது மடமையிலும் மடமை.

''அரசியல் சுதந்திரம் ஒன்று இருந்தால் மற்றச் சுதந்திரங்களெல்லாம் நாளடைவில் கட்டாயம் பின் தொடர்ந்து வரும். அரசியல் சுதந்திரம் இல்லாவிட்டால் வேறு எந்தச் சுதந்திரமும் ஒருநாளும் கிட்டாது.

— பேராசிரியர் கல்கி

உதவியவர்: ஈழமாறன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரன் - சுடர் புதிய விற்பனையாளர்கள்

**கைதடி**

திரு. [illegible] புஷ்பராசா
"லீலாவதி ஸ்ரோர்ஸ்"
கைதடி

**நல்லூர்**

திரு. க. கிருஷ்ணனந்தம்
ஸிறீ முருகன் ஸ்ரோர்ஸ்
254,256, பருத்தித்துறை வீதி
நல்லூர்

**அச்சுவேலி**

திரு. மு. தங்கராசா
பஸ் நிலையம்
அச்சுவேலி

**குருநாகல்**

திரு. சு. கணபதிப்பிள்ளை
15, நீர்கொழும்பு வீதி
குருநாகல்

# தமிழ் தொழிற்சங்கக் கூட்டணியுடன் உள்ளூராட்சி எ.வி. சங்கமும் இணையுமா?

ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கத்தின் ஆண்டு விழா 10-7-76 சனிக்கிழமை மட்டக்களப்பில் இடம்பெறுகிறது.

தனிச் சிங்களச் சட்டத் திணிப்பில் இருந்து தமிழ் பகுதி ஊழியருக்கு விதிவிலக்குப் பெற்றுத்தர அகில இலங்கை உள்ளூராட்சி லிகிதர் சேவைச் சங்கம் மறுத்த காரணத்தாலேயே காலியில் நடைபெற்ற மேற்படி சங்கக் கூட்டத்தில் இருந்து வெளிநடப்புச் செய்த தமிழ் உறுப்பினரால் அமைக்கப்பட்டதே ஜனநாயக உள்ளூராட்சி எழுதுவினைஞர் சங்கம். ஆயினும் இது காலவரை மொழிவழித்தொழிற் சங்கங்களது கூட்டணியில் சேராத இச்சங்கம், இப்பொழுது அதன் வருடாந்தக் கூட்டத்தில் மொழிவழித்தொழிற் சங்கங்களது கூட்டணியில் சேருவதா இல்லையா என முடிவுசெய்யவுள்ளது.

சங்கம் எடுக்கப்போகும் மேற்படி முடிவு சங்கத் தலைமைக்கான போட்டியில் பலத்த தாக்கத்தையும் ஏற்படுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. அங்குமில்லை இங்குமில்லை என்ற திரிசங்கு சொர்க்க நிலையை முடிவுக்குக்கொண்டு வந்து மொழிவழித்தொழிற் சங்கக் கூட்டணியில் சேரவேண்டும் என்பதே உறுப்பினரது பொது அபிப்பிராயமாகும். தமிழ் தொழிற் சங்கக் கூட்டணியுடன் இணைய வேண்டுமென்ற தீர்மானத்தை திரு. மா. குலேந்திரன் கொண்டு வருகிருர். அத்துடன் தமிழர் பிரச்சினை சம்பந்தப்பட்ட இரு தீர்மானங்களையும் தாம் கொண்டுவரவிருப்பதாக திரு. குலேந்திரன் தெரிவித்தார்.

## முதலாவது போராட்டம்...

—1-ம் பக்கத் தொடர்

ருக்கும் அறுபதுக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்களில் சிலர், ஆகஸ்டில் கூட்டுச் சேரா மாநாட்டுக்கு முன் தாம் விடுதலை செய்யப்படாவிடின், அல்லது நீதி விசாரணைக்குட்படுத்தப்படாவிடின் — சாகும்வரை உண்ணவிரதமொன்றை மேற்கொள்ள ஆலோசித்து வருவதாக சென்ற வார சுதந்திரனில் வெளிவந்திருந்த செய்தி வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

### நவம் சந்தித்தார்

சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களில் சிலரை சென்ற 7-7-76 புதன்கிழமை சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் சிறைச்சாலையில் வைத்து சந்தித்துப் பேசினர். சிறைச்சாலையில் துன்புற்றபோதும் இலட்சிய ஆர்வம் குன்றுமல், வைராக்கியத்துடன் தமிழ் இளைஞர்கள் இருப்பதாக திரு. நவரத்தினம் பின்னர் தெரிவித்தார். சிறையில் இருக்கும் இளைஞர்கள் எவ்வித பேதமுமின்றி ஒற்றுமையாகவும் கட்டுப்பாட்டுடனும் மகிழ்ச்சியுடனும் இருப்பதாகவும், இனவிடுதலை ஆர்வமுள்ள தமிழ் இளைஞர்கள் சிலரிடையே சில காலத்துக்கு முன் ஏற்பட்ட பிரிவுகளும் பேதங்களும் அறவே நீங்கி அனைவரும் மீண்டும் ஒன்றுபட்டியங்குங்காலம் - மீண்டும் தோன்றும் என்று தாம் நம்புவதாகவும் திரு. நவரத்தினம் சுதந்திரனுக்கு தெரிவித்தார் கோப்பாய் பா.உ. திரு. சி. கதிரவேற்பிள்ளையும் இவ்வாரம் சில இளைஞர்களை சிறைச்சாலையில் சந்திக்க ஏற்பாடாகியிருந்தது


வெளிவருகிறது
சுதந்திரன் வெளியீடு—8.
ஈழவேந்தன் எழுதிய
தமிழக மறுமலர்ச்சியின் தந்தை
மறைமலை அடிகள்
விலை ரூபா 1.00

10-வது வெற்றி வாரம்!
செல்லமகால்
சுஜாதா, கமலஹாசன், விஜயகுமார், லீலாவதி,
நடித்த
ஜனதிபதி விருது பெற்ற
'அவள் ஒரு தொடர் கதை'
திரைக் கதை—வசனம் டைரக்ஷன்— கே. பாலச்சந்தர் B.S.c.
தயாரிப்பு:- இராம அரங்கண்ணல்

6வது வாரம்
கெயிட்டி
ஜெயசுதா - ஜெய்சங்கர்,
தங்கவேலு - மனோரமா
நடித்த
பந்தாட்டம்

10வது வெற்றி வாரம்
கெப்பிட்டல்
நடிகர் திலகம் சிவாஜி (இரட்டை வேடம்) உஷா, நந்தினி, மேஜர் சுந்தரராஜன், நாகேஷ், பண்டரிபாய்,
நடித்த—
கௌரவம்
(ஈஸ்ட்மென் கலர்)

லிடோ (யாழ் நகர்) 9-வது வெற்றி வாரம்
சிவாஜி, ஜெயலலிதா, விஜயகுமார், சுந்தரராஜன்
—நடித்த
அன்பைத்தேடி
(ஈஸ்ட்மன் கலர்)

கிங்ஸ்லி 16-ம் திகதி முதல்
முத்துராமன், விஜயகுமாரி, ரவிச்சந்தர்
நடித்த
அமுதா

பிளாசா
ஜெய்சங்கர் - கே. ஆர். விஜயா, ரவிச்சந்தர்
நடித்த
ரோசக்காரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் [illegible] கொழும்பு 18 பண்டாரநாயக வீதி, 194 ஏ இலக்கத்தில் 1976ம் வருடம் ஜூலை மாதம் 11-ந் திகதி [illegible] பிரசுரிக்கப்பட்டுள்ளது